

ஒரு மகாராஜாவின் மறைவு
▸29 பக்கம்



படக்கொப்பியும் பயில்வானின் புகழும்
▸08 பக்கம்



ஆவணி விகடங்கள்
▸17 பக்கம்

# சிரித்திரன்

ஆவணி 2021 நகை 33 சுவை 374 விலை 95.00 SIRITHTHIRAN Est.1963




ISSN 2773-7101


செய்தொழில் தெய்வம் சிரிப்பே சீவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

siriththiran.com

சிரித்திரன்

தேசம் விட்டுப் போனாலும்
மண் வாசம் விட்டுப் போகாமல்
எம் நேச உறவுகளுடன் உறவாட சிரித்திரன்...



# சிரித்திரனை

"வீடு சிரிக்க ஒரு ஏடு"

உங்கள் உள்ளம் மகிழவும் இல்லம் சிரிக்கவும்
புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் சிரித்திரனை
தவறாது பெற்றுக்கொள்ள சந்தாதாரர் ஆகுங்கள்

## இலங்கையில்...

சிரித்திரனை விற்பனை செய்ய
ஒரு அரிய சந்தர்ப்பம்
இன்றே பதிவு செய்ய...

www.siriththiran.com

மின்னஞ்சல் : subscribe@sitiththiran.com
WhatsApp : +94741238937
தொலைபேசி : +940213151140 / +94741238937

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செய்தொழில் தெய்வம் சிரிப்பே சீவியம்"

# சிரித்திரன்

ஆவணி 2021 நகை 33 சுவை 374

புதிய கண்டுபிடிப்புக்களுக்கான வளர்ச்சியகம் (Centre for Creativity and Innovation) நிறுவனத்தால் இவ்விதழ் வெளியிடப்பட்டது.

65 வேலப்பர் ஒழுங்கை
(கனகரத்தினம் கல்லூரி முன்வீதி),
அரியாலை, யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிப்பு: நியூ எவகிறீன் அச்சகம் (New Evergreen Printers)

சிரித்திரன் குழு:

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர் | : செல்வராசா நந்தகோபால் |
| இணை ஆசிரியர்கள் | : சுரேஷ் கணபதி |
| | முத்து இராகவன் |
| | வாணி சுந்தர் |
| ஓவியர் | : பிருந்தாஜினி பிரபாகரன் |
| தொலைபேசி | : +94 21 315 1140 |
| WhatsApp | : +94 75 741 7332 |
| மின்னஞ்சல் | : editor@siriththiran.com |
| அஞ்சல் | : 65 வேலப்பர் ஒழுங்கை (கனகரட்ணம் கல்லூரி முன்வீதி), அரியாலை, யாழ்ப்பாணம். |
| இணையம் | : www.siriththiran.com |

(இவ்விதழில் இடம்பெறும் கதைகள் மற்றும் கதாபாத்திரங்கள் அனைத்தும் கற்பனையே. எழுத்தாளர்களின் ஆக்கங்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே.)




# நாணயமாற்று

உலகத்தின் தனித்தீவில் வாழ்கின்ற எங்களுக்கு நெருக்கடி என்பது வழமையாகிவிட்டது போலுள்ளது. ஒவ்வொரு தலைமுறையும் தங்கள் காலத்தில் ஒரு குறிப்பிட்ட தேசிய நெருக்கீடுகளை அனுபவிக்கும் வரம் பெற்றவர்களாகிவிட்டோம். சுதந்திரத்திற்குப் பின் வரிசைக்கிரமமாகக் கால இடைவெளியில் அது நகர்ந்துவந்து கொண்டே இருக்கிறது.

யுத்தம் முடிந்து பத்து ஆண்டுகள் கடந்த பின்னர் இந்த உலகமயமாக்கல் யுகத்தின் அனுபவங்கள் இனிவரும் தலைமுறை அனுபவிக்கும் என்று யோசிக்கும் தறுவாயில் நாட்டின் என்றுமில்லாத பொருளாதார சரிவு நெருக்கடிதர ஆரம்பித்திருக்கின்றது. வளர்ந்து செல்லும் தொழிட்நுட்ப உலகத்தை எதிர்கொள்ள இளஞ்சமுதாயத்தை தயார்படுத்தவும் அவர்கள் பங்குகொள்வதற்கும் நாட்டின் முறையான கட்டமைப்புக்கள் இல்லாத சூழலில் எமக்கு இந்தப் பேரிடர் வந்துள்ளது.

இதன் எதிர்வினை என்ன? தேசிய உற்பத்தியில் இதுவரையில் சேவைத்துறையே பெரும்பங்காற்றுகிறது. உற்பத்தித்துறையின் பங்கு சொற்பமாகத்தான் உள்ளது. ஆனாலும் இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்தே இறக்குமதிகள் நிறுத்தப்பட்டு வருவதால் எமக்குத் தேவையான அத்தியாவசிய கருவிகளின் தட்டுப்பாடுகளும் எதிர்வரும் காலங்களில் அதிகரிக்கும்.

எனவே அவற்றினை நாமே உற்பத்திசெய்ய வேண்டுமாக இருந்தாலும் உற்பத்தி கருவிகளை இறக்குமதி செய்யவேண்டும். அல்லது அவற்றுக்கான மூலப்பொருட்களையேனும் நாம் இறக்குமதி செய்யவேண்டும். ஆனால் அது எவ்வளவு சாத்தியம். டொலர் கையிருப்பு, அத்தியாவசிய தேவைகளுக்கான கொள்முதலுக்கே இல்லாத சூழலில் மேற்படி செலவுகள் செய்யவே முடியாதுள்ளது. அத்துடன் டொலருடன் ஒப்பிடுகையில் எமது நாட்டின் நாணயமாற்று வீதம் மலையும் மடுவுமாக மாறிவருகிறது. ஆனாலும் எமக்கும் சர்வதேசத்தில் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

அதனால் இப்பொழுது எமது நாட்டிற்குச் சர்வதேச வர்த்தகம் மேற்கொள்ளவும் குறிப்பாக உற்பத்தி கருவிகள் வாங்குமளவிற்கேனும் நாணயம் ஒன்றுக்கான கேள்வி காணப்படுகிறது. இது ஐரோப்பிய நாடுகளில் உள்ள ஒரு முறைபோல. உதாரணமாக சுவிஸ் பிராங்கினையும் யூரோ நாணயங்களையும் ஒரே நாட்டில் கொடுக்கல் வாங்கலுக்குப் பயன்படுத்துவது போல எமது நாட்டிலும் பிறிதொரு நாணயத்தின் தேவை அவசிய மான காலம் தோன்றியுள்ளது போல் தெரிகிறது. அதற்காக எதிர்காலத்தில் இலங்கையில் உள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் அவ்வாறான நாணயத்தில் இலங்கைப் பிரஜைகளுக்கும் ஊதியம் வழங்கும் காலமும் வரலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா அரசியல்வாதிகளும் தமது வயிற்றுக்காகத்தான் போராடுகிறார்கள். பின்பு கட்சியென்று கண்ணீர் வடிக்கிறார்களே அதுதான் புரியவில்லை.

# யாழ்தேவியில் கேட்டது




அரசியலைப் பற்றியும் மதத்தைப் பற்றியும் நாம் பேசும் போது சண்டை வரப்பார்த்தது. இப்போது பாலியல்பற்றிப் பேசுகின்றோம்... எல்லோரும் ஒற்றுமை.

ஆண் பெண்ணென்று இன்று இனம் கண்டு பிடிப்பது கஸ்டம். எப்படி அழகுராணிப்போட்டி ஆணழகன் போட்டியென்று நடத்துகிறார்களோ எனக்குப் புரியவில்லை

ஆரோடும் "அப்போயின்மென்ட்" வைக்கலாம், இந்த எஞ்சின் டிரைவரோடு மட்டும் வைக்கக்கூடாது.

திருவோண நட்சத்திரத்தில் பிறந்தால் மூன்று கோணத்தை ஆளுவதாகச் சொல்கிறார்கள்... அது ஓரளவு உண்மை... எனக்கு "கோணர் சீட்" கிடைத்திருக்கு.

"வீட்டில் தலையணை இதமாக இல்லாவிடில் நித்திரை வராது. ஆனால் ரயிலில் இருந்த இரையில் எவ்வளவு நிம்மதியாகத் தூங்கிறார்கள்"



# காரணம்

ஒருநாள் இரவு முல்லாவின் வீட்டுக்குள் திருடனொருவன் நுழைந்துவிட்டான். திருடனைக் கண்ட முல்லா வெளியில் ஓடிச் சென்று புதரினுள் ஒழிந்து கொண்டார். எவ்வளவு தேடியும் எந்தவொரு பெறுமதியான பொருளும் திருடனுக்கு கிடைக்கவில்லை. ஆத்திரமடைந்த திருடன் வீட்டை விட்டு வெளியேறியபோது புதரினுள் ஒழிந்திருந்த முல்லாவைக் கண்டுவிட்டான்.


அதிர்ச்சியடைந்த திருடன் தனது பயத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் 'யார் நீ உனக்கென்ன வேலை இங்கே?' என்று உரத்த குரலில் கேட்டான். அதற்கு முல்லா 'ஐயா' முதலில் நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். திருடரான உங்களுக்கு தருமளவிற்கு எனது வீட்டில் எந்த பெறுமதியான பொருளும் இல்லை. அதனால் தான் வெட்கத்தில் இங்கு ஒளிந்து கொண்டேன்' என்றார்.

**தொகுத்தவர் : அல்தமிஷ்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முன் சிரிப்பு




பிச்சைக்காரன் 01 : விலைவாசி போகிற போக்கைப் பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கு...

பிச்சைக்காரன் 02 : ஏன்?

பிச்சைக்காரன் 01 : எல்லாருமே நம்ம கூட்டத்தில் சேர்ந்திடுவாங்கபோல் இருக்கு.




தரகர் : பெண்ணிற்கு நிறைய நகைபோடுவதாக பெண்ணின் தந்தை கூறினார்

ஒருவர்: பெண்ணின் தந்தை என்ன வேலை?

தரகர் : கில்லிட்டு வியாபாரி.

– குலம்



ஒருவர் : என் நடிகை மனைவியால் ஏழையாகிப் போனேன்.

மற்றவர் : ஏன்... நடிகை எல்லோரும் பணக்காரர்களே!

ஒருவர் : அவள் பணக்காரர் போல் நடிப்பவள்.

ஏனக்கா நீங்கள் இப்போ முடிமயிர் வைத்துக் கொண்டை போடுவதில்லையே!

இந்த விலைவாசி காலத்தில் உடம்பில் தென்பிருந்தால்தானே அதைச்சுமப்பதற்கு.

– அதிமதுரம்







குடிகாரன் : இந்தா அப்பா கொஞ்சம் சாராயம் குடி.

மற்றவர் : பொலிடோல் குடிக்கப் போகிறேன்... கொஞ்சம் கொஞ்சமாகச் சாவதற்கு எனக்குப் பொறுமையில்லை.

– ஜோக்கிரட்டீஸ்

நிருபர் : உங்கள் மனைவி சிறந்த பந்துவீச்சாளராக இருப்பதன் ரகசியமென்ன?

மற்றவர்: என் மீது பாத்திரங்களை வீசிப் பழகியதுதான்.

– ச.ரா.பா



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செய்திச் சோடி

ஐரோப்பிய நாடுகளிற்குச் செல்வதற்குப் பல்லாயிரக்கணக்கானோர் விசா விண்ணப்பித்துள்ளனர்.

**செய்திகள்**

சீன, இரஷ்ய தடுப்பூசிகள் ஐரோப்பாவில் அங்கீகரிக்கப்படவில்லை. அதனால் குறித்த தடுப்பூசிகள் போட்டுக் கொண்ட பலரது விசா விண்ணப்பம் நிராகரிப்பு.

**செய்திகள்**

கொரோணாக் காலத்திலும் எமது வழி காட்டலில் கல்வி நடவடிக்கைகள் மிகவும் சிறப்பாக உள்ளது.

**ஜனாதிபதி**

கொரோணாக் காலத்தில் கல்வி நடவடிக் கைகள் தோல்வியடைந்துள்ளது, ஆசிரியர் சங்கம் வேலைநிறுத்தம்.

**ஆசிரியர் சங்கம்**



எமது புதிய நிதியமைச்சர் தனது அலுவலகத்தில் கடந்த இரண்டு நாட்க ளாக நள்ளிரவு கடந்தும் கடமைகளைச் செய்தார்.

**மூத்த அமைச்சர்.**

நாடு முழுவதும் சுமார் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதிகள் அமைக்க நிதிய மைச்சர் திட்டம்


**இன்றைய செய்திகள்**

எரிபொருள் கப்பல் திருப்பி அனுப்பியதால் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு வரலாம்.

**எதிர்கட்சிகள்**

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு வருமென எதிர்கட்சி பொய் பேசுகிறது. பணம் இல்லாமல் கப்பல் திருப்பியனுப்பியது உண்மைதான். ஆனால் இன்னும் இருபத்தியெழு நாட்களுக்குத்தான் எம்மிடம் எரிபொருள் உள்ளது.

**உதய கம்மன்பில**



## பதிபக்தி

பெற்றோருக்குத்
தெரியாது
மதுப்பிரியனைக்
காதலித்து
திருட்டுத்தனமாக
அவனுடன்
மோட்டார் சைக்கிளில்
ஓடுபவளும்
ஒரு
பதிவிரதை
உடன்கட்டை
ஏறுபவள்


-வர்மன்-

## பிறவிப்பயன்

மனைவிமக்கள்
வயிறுகள்...
பசியால்
பற்றி எரிய
ஒன்றும் படைக்காது
தான் படைத்த
நாவலில்
மெய்மறந்து
இருப்பான் ஒரு
நீரோ மன்னன்

- வர்மன் -


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## உணவும், உறவும்

சிரித்திரன் இதழில் ஒவ்வொரு வாரமும் பிரசுரிக்கப்படுகின்ற உணவும், உறவும் எனும் பகுதியானது என்னை மிகக் கவர்ந்த பகுதியாகும். முட்டைக்கோப்பி எனும் சத்துள்ள பானமானது இலகுவாயிருந்தாலும் அதில் உள்ள சத்துக்கள் பற்றி எல்லோராலும் அறியப்படாத ஒன்று. அதனால் ஏற்படும் மருத்துவ குணங்களை செய்முறை ஊடாகவும், கதை மூலமும் கொண்டு வரும் முயற்சிக்கு எனது பாராட்டுக்கள்.

**மருதநாயகம் வானுசன்,**
**மட்டக்களப்பு.**

## சிரித்திரனே மீண்டும் வருக...!

வானமெங்கும் நட்சத்திரம்
எம் வாசலெங்கும் சின்னத்திரை
மாலை வரை கண்கள் சோர கதைகள் பல
திண்ணைகள் மறந்து
தொலைக்காட்சிகள் பிறந்த இவ்யுகத்தில்
சிந்தை குளிரச் சிரித்து மகிழச்
சிரித்திரனே மீண்டும் வருக...!

**பார்த்திபன் கவிதா,**
**பாலாவி.**

## சிரிகதை

வாசகர் பகுதியினூடாக சிரித்திரன் சஞ்சிகையில் இணைந்து கொள்வது மகிழ்சியே! சிரித்திரனில் வெளியாகும் சிரிகதை என்னை மிகவும் கவர்ந்த பகுதியாகும். ஆடி மாதம் வெளியான கமால் மாஸ்டர் கள்ளன் பிடித்த கதை சிரிகதையானது சிரிப்புடன் கூடிய சிந்தையைத் தூண்டும் கதையாக அமைந்திருக்கின்றது. சிரிகதையின் ஊடாகவும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் என இக்கதை உணர்த்துகிறது. தொடர்க உங்கள் பணி.

**சசிகரன் கௌதமன், நல்லூர்.**

## பூனை

பூனை பற்றி அழகான குறிப்புக்களை யூன் மாத இதழில் அறிந்தேன். எமது வீட்டுப்பூனை பல குட்டிகள் போட்டபோது அவைகள் வளர்ந்து தொல்லை கொடுக்கும் என வெளியான இடமொன்றில் விட்டுவிட்டோம். மறுநாள் காலை அவை யாவும் வீட்டில் உலாவந்தன. இது எப்படி என்பது புதிராகாவே இருந்தது. பூனை குறுக்கே போனால் காரியம் பிழைக்கும் எனும் கருத்து உண்மையா அல்லது வாய்வழிவந்த கதையா என்பதும் புதிராகவே உள்ளது.

**வசந்தன் புண்ணியமூர்த்தி**
**பருத்தித்துறை**

## "மேலோன் என்றும் வாழ்வோன்"

மாமனிதர் அழகையா துரைராசா பற்றி சிரித்திரன் மீள நினைவுபடுத்தியது இன்றைய இளம் தலைமுறையினர்க்கு ஓர் உந்துதலாய் உள்ளதென்பதில் ஐயமில்லை. எமது மண்ணில் பிறந்து சாதித்தவர்களைப் பற்றி அடுத்த தலை முறையினருக்கும் தெரியப்படுத்தும் உங்கள் முயற் சியைக்கண்டு மெய்சிலிர்கிறேன். தொடரட்டும் உங்கள் பணி.

**நவயுகன் மாதுரி, கனடா.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50இன் ஆசைகள்

ஐம்பதாவது வயது பற்றிய கட்டுரையை வாசிக்கும் போது மிகவும் உணர்வு பூர்வமாக இருந்தது. உண்மையில் ஐம்பதை எல்லோரும் கொண்டாட வேண்டும். உங்கள் உறவுகளுடன் ஐம்பதாகும் போது கொண்டாடுங்கள்

**ராஜேஸ்வரன் துரைசாமி,**
**லண்டன்.**

## நிலைக்கண்ணாடி

நிலைக்கண்ணாடியில் குறிப்பிட்டது போன்று (ஆடி 2021) போர்க்காலக் கட்டத்தில் 'சுய தொழில்' இருந்தது போன்று இன்று வாய்ப்பிருந்தும் 'சுயதொழில்' இல்லை எனக் குறிப்பிட்டிருந்தார்கள். நல்ல கருத்து. இதற்கான காரணங்கள் அறியப்பட வேண்டியவை. அரசாங்கம், பொறுப்பதிகாரிகளைக் குறைகூறுவதும், மஞ்சள் விலை கூடிவிட்டது என மக்கள் கூச்சலிடுவதையும் விட்டு விட்டு வீட்டில் ஏன் மஞ்சள் வளர்க்கக்கூடாது?

**ரமேஸ் சுப்பிரமணியம்,**
**வவுனியா.**

## சிரித்திரனால் பாராட்டு

சிரித்திரன் பற்றி எனக்குத் தெரியாது கடையொன்றில் புதிய சஞ்சிகையினைக் கண்டேன் படித்திவிட வேண்டும் என்று வாங்கிப் பார்த்தேன் வீட்டிற்கு வந்து தாத்தாவிடம் கொடுத்தேன் எனது தெரிவிற்கு தாத்தா என்னைப் புகழ்ந்து பாடினார். அப்போது தான் தெரியும் சிரித்திரன் பற்றி...

**நடேசலிங்கம் கலைவாணி,**
**பருத்தித்துறை.**

**கனம் சிரித்திரன் ஆசிரியர் குழு அவர்களுக்கு,**

சிரித்திரன் வெற்றிப்பாதையில் வீறு நடை போட நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் என் பாராட்டுகளும் வாழ்த்துகளும்!

மகுடி பதில் என்ற தலைப்பில் இடம் பெறும் கேள்வி பதில் பகுதியை நான் ஒவ்வொரு மாத இதழும் விரும்பி ரசித்துப் படிக்கும் பகுதியாகி விட்டது. அடுத்து சுரேஸ் கணபதியால் எழுதப்படும் சொல்லாட்சி என்ற தொடரில் திருக்குறளை இணைத்து எழுதப்படுவது சொல்லையும் குறளையும் தமிழையும் தரம் உயர்த்தி நிற்கிறது! வாழ்த்துகள்!

ஜென் கதை மூலமாக ஆன்மீக வளர்ச்சிக்கும் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியைத் தருகிறது. மேலும் இனி வரும் காலங்களில் இது இன்னும் விரிவுபடுத்த வேண்டும் என விரும்புகிறேன்.

அறு சுவை உணவு போல சிரித்திரன் எல்லா வகையான எழுத்துச் சுவைகளையும் சுமந்து வருவது அற்புதம்! அடுத்து ஆனி மாத இதழில் கணவன் மனைவி கலவரம் என்ற எழுத்தாக்கத்தில் படத்திற்கும் எழுத்திற்கும் மிகக் கூடிய இடைவெளி இருப்பதாக கருதுகிறேன். அதாவது வெளிநாட்டு வாழ்க்கை முறையை சித்தரிக்கும் படமும் நம் கலாசாரத்தைச் சித்தரிக்கும் எழுத்தாக்கமாக அந்தப் பதிவு அமைந்திருக்கிறது! இது சற்று முரணான உருவாக்கமாக என் கண்களுக்குள் உள்வாங்கினேன். எழுத்தை படமும் படத்தை எழுத்தும் பிரதிபலிக்குமாறு உங்கள் ஆக்கங்கள் அமைந்தால் மிகவும் ரசனைக்குரியதாக அமையும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

நன்றி

**மேனகா சச்சி**
**(அளவெட்டி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• ஜென்கதை

# சிக்கலில் இருந்து விடுபட

**பு**த்த பெருமான் அவர்கள் சீடர்கள் முன் சிறிய துணி ஒன்றை விரித்துக் காட்டினார். அந்தத் துணியின் இரண்டு முனைகளையும் சேர்த்துப் பல முடிச்சுக்கள் போட்டார். அதேபோல மற்ற இரண்டு முனைகளையும் சேர்த்துப் பல முடிச்சுக்கள் போட்டார்.


இப்போது அந்தத் துணி நிறைய முடிச்சுகளுடன் உருக்குலைந்து இருந்தது.

"சீடர்களே! இப்போது நான் வைத் திருக்கும் துணியும் முன்பு வைத்திருந்த துணியும் ஒன்றா?" என்று கேட்டார்.

என்ன பதில் சொல்வது என்று அறியாமல் சீடர்கள் திகைத்தார்கள்.

அவர்களில் ஒருவர் "பெருமானே! நீங்கள் முன்பு வைத்திருந்த துணியும் இப்போது உள்ள துணியும் ஒன்றுதான். இரண்டிற்கும் சிறு வேறுபாடு உள்ளது. முன்பு இருந்த துணி சுதந்திரமாக இருந்தது. இப்போது உள்ள துணி அடிமைப்பட்டுள்ளது.

நன்றாகச் சொன்னாய். பாராட்டு கிறேன். நாம் அனைவரும் இயல்பாக இருக்கும்போது கடவுளைப் போன்று சுதந்திரமானவர்கள்தான். பிரச்சனை களில் சிக்கித் தவிக்கும் போதுதான் அடிமை ஆகிறோம். இந்தத் துணியில் உள்ள முடிச்சுக்களை அவிழ்த்தால் அது மீண்டும் சுதந்திரமாகி விடும். முடிச்சுக்களை அவிழ்க்க என்ன செய்ய வேண்டும்?"



என்று கேட்டார்.

அந்தச் சீடரே "பெருமான்! முடிச்சுக்கள் எப்படிப் போடப்பட்டு இருக்கின்றன என்பதை முதலில் அறிய வேண்டும். அப்படி அறிந்தால்தான் முடிச்சுக்களை அவிழ்க்கும் முயற்சியில் மேலும் மேலும் முடிச்சுக்கள் விழுந்து அவிழ்க்க முடியாத நிலை ஏற்படும் என்றார்.

"இந்த முடிச்சுக்களைப் போன்றதுதான் நம் பிரச்சனைகளும், பிரச்சனைகளின் உண்மையான காரணத்தை அறிந்தால் தான் பிரச்சனையிலிருந்து விடுபட முடியும்" என்றார் பெருமான் அவர்கள்.

## ஐம்பொன்

போர்களின் போது கொல்லப்பட்ட வர்களைக் காட்டிலும் கவலையால் மாள்பவர்களின் எண்ணிக்கை அதிகம்!

கெட்ட வழிகளில் கிடைக்கும் லாபமானது நட்டத்திற்குச் சமமானது.

முதலில் மனதிற்கு வைத்தியம் செய்யுங்கள். அதற் கப்புறம் வியாதிக்குச் செய்யலாம்.

எண்ணங்களில் குழந்தைகள்தான் ஏழ்மையும் வறுமையும்!

சுறுசுறுப்புடன் வேலை செய்து வரும் தேனீகளிற்கு அழுவதற்கு நேரமில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்டைக்கு அவன் அந்த இடத்திலை நிண்டிருந்தால் அரை மணித்தியாலக் கட்டம் அநியாயமாய்ப் போயிருக்காது" இது பயில்வான் அண்ணை கொஞ்ச நாளாய் அடிக்கடி சொல்லுற நியாயம். ஏனெண்டால் பயில்வான் அண்ணைக்குத் தெரியும் சந்திரன் தவிர இந்தக் கொப்பியை சரியாப்பழுது பார்த்து படம் போட இந்த ஊரில எந்த எஞ்ஜினியரும் இல்லை என்று.

தனது வீட்டில் படம் போட்டு ஊருக்கு ஒரு விலாசம் காட்ட வேணும் என்பது பயில்வான் அண்ணையின் நீண்ட நாள் கனவு. தோட்டத்திலுள்ள துரவுப் பாதையில் இறங்கி பனையோலைப் பட்டை முழுவதுமாக நீரில் அமிழும் வரை தண்ணீரைக் கோலித் தூக்கி வரேக்கையும் செங்குத்தான பாதையில் தண்ணீருடன் ஏறும் வேளையிலும் மிளகாய் கன்றுகளுக்கு தண்ணீரை

"உன்ர படம் எங்கையிருந்து எங்கை மட்டும் ஓடினது? ஓடின படத்தை கலைச்சுப் பிடிச்சாச்சோ?"



# படக்கொப்பியும் பயில்வானின் புகழும்

சங்கக்கடையில் மண்ணெண்ணை அளப்பது போல் சமமாகப் பிரித்து ஊற்றும் போதும் அவருக்கு அளவுக்கு அதிகமான உற்சாகத்தைத் தருவது இரவுக்கு வீட்டை படமோடப் போறன் என்ற மகிழ்ச்சியான எண்ணம்தான்.

ஆனால் நான் இதிலை ஒன்றைச் சொல்லியே ஆகவேணும். உண்மையில படம் பாக்கிறதும் அதிலை சிவாஜிகணேசன் முதல் விஜயகாந் வரைக்கும் உள்ளவையின்ரை படக் கதைகளைத் தோட்ட வெளியிலும் கள்ளுத் தவறணையிலும் மற்றவைக்குப் புளுகித் தம்பட்டம் அடிக்கிறதையும் தவிர பயில்வான் அண்ணைக்கு ரீவியைப் பற்றியோ அதிலை படம் போடுற நேரத்தில் வாற குழப்பங்களைப் பற்றியோ எதுவும் தெரியாது.


சொல்லப் போனால் படம் ஓடுறதுக்கான செலவுகளைத் தண்ணியை வாரி இறைக்கிற மாதிரி காசை வாரி இறைக்கிறதைத் தவிர பயில்வான் அண்ணைக்கு வேறெதுவும் தெரியாது. இந்த வித்தை பயில்வான் அண்ணைக்கு மாத்திரமில்லாது படம் பார்க்கவாற ஒருவருக்கும் தெரியாது என்றதும் ஒரு சுவரஸ்யமான செய்தி.

அதிலும் தன்னைவிட வேறுயாரும் ஒரு இரவில் நாலு, ஐந்து படம் ஓடினால் அதுவும் அவரைப் பொறுத்த வரைக்கும் ஒரு வேண்டத்தகாத செயல். பயில்வான் அண்ணையின் நெருங்கிய சினேகிதர் கனகலிங்கம் ஒருமுறை படம் ஓடினதைப்பற்றி பெருமை பேசும் போது எங்கடை பயில்வான் அண்ணை கேட்டது "உன்ரை படம் எங்கையிருந்து எங்கை மட்டும் ஓடினது? ஓடின படத்தை கலைச்சுப் பிடிச்சாச்சோ?" என்று வில்லங்கமான பகிடி விடுவார். இருந்தாலும் தன்னைவிட படவிசயத்திலை ஒருத்தரும் மிஞ்சக் கூடாது என்பது பயில்வான் அண்ணையின் ஒரு இலட்சியம்.

அவரைப் பொறுத்த வரைக்கும் ரீவி வாடகைக்கு எடுத்து, டெக் வாடகைக்கு எடுத்து, கொப்பி வாடகைக்கு எடுத்து, எஞ்சின் வாடகைக்கு எடுத்து, இப்பிடி எல்லாத்தையும் வாடகைக்கு எடுத்து கதைக்கிறவன், கதைக்காதவன் தவறணையில் கள்ளுக்குச் சண்டை பிடிச்சவன், தெரிஞ்சவன், தெரியாதவன் என்று கிட்டத்தட்ட ஒரு நூற்றியைம்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிகதை



இருநூறு வரையான தலைகளை ஒரே இரவில் தனது வீட்டு முற்றத்தில் கட்டிப் போடுவதென்பது சாதாரண விசயமா? அது பயில்வான் அண்ணையின் புகழ்பாடும் கூட்டமல்லவா? அதனை இழக்க அவர் எப்போதும் விரும்புவதில்லை.

படத்திற்கு வருபவர்கள் சும்மாவா வருவார்கள் வெத்திலை பாக்கு, பீடி, சுருட்டு என்று ஆண்களும், வறுத்த கச்சான், மிக்சர் என்று பெண்டுகளும் கொண்டு வந்து, ஐந்து, ஆறு படம் முடியும் மட்டும் ஆடு குழை சப்பின மாதிரி ஏதாவது சப்பிக் கொண்டே படம் பார்த்து முடிப்பார்கள்.

இவர்களில் படம் தொடங்கியதிலிருந்து அதிகாலை விடியும் வரை ஓடும் படம் வரையும் ஆவுரஞ்சிக் கல்லைப் போல் அசையாமல் இருந்து பார்ப்போரும் உண்டு. ஒருபடத்தின் இடைவேளை வரமுன்பே மண் கவ்வுவோரும் உண்டு.

படம் ஒடுற செலவைத் தவிர பயில்வான் அண்ணைக்கு வேற என்ன செலவு செய்ய இருக்கிறது? அண்டைக்கு வேற மகளின்ர சாமத்திய வீடு மிஞ்சி மிஞ்சிப் போனா பலகாரத்தையும் ரீயையும் ஊத்திக் குடுக்கிறதுதான் செலவு.

உந்தச் செலவுகளுக்கெல்லாம் பயப் பிடுற ஆளில்லை பயில்வான் அண்ணை. அவரைப் பொறுத்தமட்டில் அண்டைக்கு ஓடுற படங்களைப் பற்றியும் தன்னைப் பற்றியும் ஊரில உள்ளவை காலம் முழுக்க புகழ்ந்து புளுக வேணும் என்றதுதான். அவற்றை எதிர்பார்ப்பு.

படமெல்லாம் நன்றாக ஓடிக்கொண் டிருந்த நேரம் முதலாவது படம் ஒடி இரண்டாவது படம் ஓடும் மட்டும் ஒரு பக்கமா இராஜமரியாதையோடை மிக்சர், பலகாரம் என்று மாறிமாறிச் சாப்பிட்டுக் கொண்டும் இடையிடையே படம் பார்க்கவந்த பெண்டுகளைச் சாடை மாடையாக சைகை காட்டி ரசித்துக் கொண்டுமிருந்த சந்திரனுக்கு மூன்றாவது படத்தைப் போட்டுவிட்டு வெளியே போய்விட்டான்.

படம் இடையில் கசற் நாடா சிக்குப் பட்டு அல்லோல கல்லோலப்பட்டு பலருக்கு தகவல் செல்வி அனுப்பிய பின்னரே சந்திரன் வந்து நான்காவது ரஜனிகாந்தின் முத்து படத்தை போட் டான் அதன் பின் தான் அல்லோல கல்லோலம் நிறைவுக்கு வந்தது. இந்தப் படமோடுறதெல்லாம் சந்திரனுக்குப் பெரிய விசயமில்லை. படத்துக்கு வாற பெண்டுகளை ரசிக்கிறது தான் பெரிய விசயம். ஊரில உள்ள பெண்டுகளுக்கு சந்திரனைத் தவிர ஒரு ஆணழகனைத் தெரியாது. அதோபோல்சந்திரன்போன்ற எஞ்ஜினியறிங் தெரிந்த (அதாவது ரீவி, டெக்கில் படம் போடும் எஞ்ஜினியறிங்) ஆண்மகனும் கிடையாது.

படத்தில் பார்க்கும் "என்றென்றும் காதல்" விஜய்க்கு ஒப்பான அழகன் சந்திரன்தான். ஊருக்குள்ள ரீவி டெக் வாடகைக்கு விடுற இரண்டு முன்னணி தொழிலதிபர்களிலை சந்திரன் முதன்மை யானவன் இது சந்திரனுக்கு ஊர் மக்கள் கொடுத்த ஒரு அங்கீகாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரை வெளுக்க வேணும் எண்டு நினைச்சுக் கொண்டு வந்தாரோ அதே சந்திரன் பிளேன்ரியும் கையுமாக மகளுடன் வழிந்து வழிந்து பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்த பயில்வான் அண்ணைக்கு குடிச்ச கள்ளும் வெறி முறிந்தது…

"எவ்வளவு புகழ் அங்கீகாரம் கிடைத்தாலும் அதைக் காப்பற்றிக் கொள்ளும் அளவிற்கு நடந்துகொள்ள வேண்டும்". இதுவும் பயில்வான் அண்ணையின் நியாயம்தான். உண்மையைச் சொன்னால் "பயில்வானின் தத்துவம்" என்றொரு புத்தகமே வெளியிடலாம். எல்லாத்துக்கும் அவரிட்டை நியாயம் இருக்கும்.

அதிலையும் தவறணைப் பக்கம் போய் வந்தால் தத்துவக் களஞ்சியம், சிந்தனைச் சிற்பி இப்பிடி பலவாறு பெயர் பெறுபவர் எங்கள் பயில்வான் அண்ணை.




"மனிசனாப் பிறந்தவன் தொழிலை நேர்மையாச் செய்ய வேணும்." இது துரையரின் ஒரு கருத்து இப்படியான கருத்துக்களைக் கேட்க கேட்க கள்ளுப் பிளாவைத் தூக்கி எறிஞ்சிட்டு சந்திரனைத் தேடிப்பிடிச்சு நாலு கிழி கிழிச்சால் என்ன எண்டு ஒரு கோபம் பயில்வான் அண்ணைக்கு வந்தாலும் இப்ப இருக்கிற வெறியிலை அவனைத் தேடிச் சைக்கிள் உழக்கினாலும் அவன் இரவு முழுக்க படம் ஓடின அலுப்பிலை நல்ல நித்திரையிலை கிடப்பான்.

இப்ப போய் எழுப்பி அவன்ரை வாட்ட சாட்டமான உடல்வாகிற்கு நித்திரை வெறிலை, வெறிலைபோற என்னைத் தூக்கிப்போட்டு வெளுத்தான் எண்டால் துரையனா வந்து காப்பாற்றப் போறான்? எண்டு தனக்குள்ளை கேள்வி கேட்டவர் இவளவு நேரமா வயிறு முட்டியும் புளிப்புடன் குடிக்கச் சிரமப்பட்ட கள்ளை ஒரே இழுவையில் இழுத்துவிட்டு பிளாவைத் தூக்கி தவறணை வேலியில் கொழுவியவருக்கு வயிறும் ஒரு பக்கம் கலக்குவது போல் இருக்க சைக்கிளைத் உருட்டிக் கொண்டு ஒரே ஓட்டமாய் புறப்பட்டார்.

சந்திரனுக்கும் மகளுக்கும் இடையில் ஓடும் படத்தைப் பற்றி பயில்வான் அண்ணை அறிந்திருக்கவில்லை…

ஒரே மூச்சில் வீடு வந்து சேர்ந்தவர் சரசக்கா படலேக்கை நிண்டது கூடத் தெரியாது சாரத்தை இழுத்து மானத்தை மூடும் பெண்டுகள் போர்க்கும் சேலைத் தாவணி போல இழுத்துச் சுத்திக் கொண்டு பனம் மட்டை வேலியில் உராய்ந்து கொண்டு படலையைத் திறந்தவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது…

யாருக்கு வெளுக்க வேணும் எண்டு நினைச்சுக் கொண்டு வந்தாரோ அதே சந்திரன் பிளேன்ரியும் கையுமாக மகளுடன் வழிந்து வழிந்து பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்த பயில்வான் அண்ணைக்கு குடிச்ச கள்ளும் வெறி முறிந்தது போல ஒரு உணர்வு.

இருந்தாலும் வெறியில்லை என்றால் எவரையும் வெருட்ட முடியாது என்பது ஊரறிந்த உண்மை. அது அவருக்கும் நன்றாகத் தெரிந்திருந்தது. எனவே வெறியை வில்லங்கமாக வரவழைத்துக் கொண்டு மீண்டும் சாரத்தின் ஒரு தலைப்பை ஒரு கையில் ஏந்தியும், மறுகையில் ஏற்கனவே படலையில் சாய்ந்து விழும் நிலையிலிருந்த சைக்கிளை "தொப்" பென்று தள்ளி விட்டும் சந்திரனை நோக்கி ஓடிவரவும் சரசக்கா படலையைச் சாத்திவிட்டு அங்கு வரவும் நேரம் சரியாக இருந்தது.

மகளுடன் சல்லாபத்தில் ஈடுபட்டிருந்த சந்திரனைக் கண்டதும் பயில்வான் அண்ணைக்கு பேச்சு மூச்சு அற்றுப் போனது. இருந்தாலும் அதனைத் தட்டிக் கேட்கவும் தெம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்லாத அவரின் நிலமையும் கவலைக்கிடமானதுதான்.

இதற்கு சரசக்காவும் உடந்தையாக இருப்பது பயில்வான் அண்ணைக்கு நெத்திப்பொட்டில் ஆணி அடித்தது போன்று சுள்ளென்றிருந்தது.

"சரசு இஞ்ச வா" இது எத்தினை நாளா நடக்கிது நீயும் சேந்துதானே எல்லாம் செய்யிறாய்? என்று குரல் தடிக்கக் கத்தினார்.

ஒவ்வொரு முறையும் படம் ஓடும் வேளையில் பயில்வான் அண்ணை மூக்குமுட்டக் குடிச்சிட்டு வந்து விலாசம் அடிப்பதும் படத்தைப் பற்றிப் புளுகுவதும்தான் அவரது பிரதான வேலையாக இருந்ததே தவிர அதைவிட அந்த வேளைகளில் சந்திரனுக்கும் மகளுக்கும் இடையில் ஓடும் படத்தைப் பற்றி பயில்வான் அண்ணை அறிந்திருக்கவில்லை.

இதை சரசக்கா சாடைமாடையாக தெரிந்திருந்தாலும் இப்போதைய சீதன நிலைமைகளில் வெறிக்குட்டி பயில்வானின் உழைப்பை நம்புவதை விட தொழில திபரான சந்திரனுக்கு மகளைக் கொடுப்பதில் என்ன பிழை வந்துவிடப் போகிறது என்பதுதான் சரசக்காவின் நியாயம்.

ஆனால் பயில்வான் அண்ணையைப் பொறுத்தவரை இது ஒரு செய்யத்தகாத செயல். அதிலும் குடிச்ச கள்ளின் வெறி முறியும் அளவிற்கு அதிர்ச்சி ஏற்படக் காரணம் இந்த சம்பவங்களுக்குச் சரசக்காவும் உடந்தை என்பதுதான்.

இவ்வளவு நாளும் படம் ஓடியது எல்லாம் வெட்டவெளி சூனியமானது அவருக்கு. அப்படியே



ஆசிரியர் : பாடசாலை நாட்களில் எல்லா போட்டிகளிலும் பங்குபற்றி பரிசில்களை வெல்வாரே இப்ப என்ன செய்கிறார்?

பழைய மாணவன் : பரிசுப் பொருட்கள் விற்பனை செய்யும் கடையொன்றில் வேலை செய்கிறார். சேர்

போய் பாயில் விழுந்தவர் அடுத்த நாள் காலையில் தான் எழும்பினார்.

சாரத்தை உதறிக் கட்டிக் கொண்டு சைக்கிளை மணலில் உருட்டியபடி சென்றவரை எதிரே வந்த மணியத்தார் கேட்டார். "இனி எப்ப அண்ணை அடுத்த படம் ஓடுவியள்" என்று இதைக் கேட்ட பயில்வான் அண்ணை ஏதோ தகாத வார்த்தையைக் கேட்டது போல் சைக்கிளை அப்படியே நிப்பாட்டினபடி ஒரு பார்வை பார்த்தார்.

மணியத்தார் பேச்சு மூச்சில்லாமல் கடந்து போனார். நான் நினைக்கிறேன் மகளின் விசயம் ஓரிரவுக்குள் தந்தியடித்ததுபோல் ஊரேல்லாம் பரவியிருக்க வேண்டும். அதனால்தான் பயில்வான் அண்ணையின் பார்வையைப் புரிந்து கொண்டு எதிரே வந்த மணியத்தாரும் மறுகேள்வி கேட்காமல் கடந்த போனார்.

படம் ஓடும்போது படத்தை எல்லோரும் ஆவென்று பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில் அந்த சூழலில் இளசுகளுக்குள் நடக்கும் சல்லாபங்கள் வழமைதான் ஆனால் இது படம்ஓடும் பயில்வான் அண்ணையின் மகளுக்கே நடக்கும் என்பதைத்தான் யாரும் இதுவரையும் கவனிக்கவில்லை.

அன்றிலிருந்து பயில்வான் அண்ணை படம் ஓடுவதுமில்லை படமோடி மொட்டை விலாசம் காட்டுவதுமில்லை. பெயருக்கேற்றாற்போல் நடக்கத் தொடங்கினார்.

யாராவது ஊருக்குள் படம் ஓடினால் அவர்களுக்கு முதல் எதிரி பயில்வான் அண்ணையாகத்தான் இருக்கும்.

- பரதன்

## நான் ஒரு முட்டாளுங்க

- சோலைக்குயில் ஹஸனி
கல்முனை.

**பசியுடன்** இருந்த ஒருவன் கடையில் போய் ஒரு ஒரு றொட்டியை வாங்கிப் புசித்தான். ஆனால் பசி அடங்கவில்லை. அதனால் இவன் மேலும் ஒரு றொட்டியை வாங்கி அதையும் உண்டான். மேலும் பசியிருந்ததால் மூன்றாம் முறையாக ஒரு றொட்டியை வாங்கி உண்டான். அதிலும் வயிறு நிறையாததால் அவன் ஒரு தோசையையும் வாங்கி தின்றான். பசியும் அடங்கி விட்டது.


உடனே தன் கையால் தலையில் அடித்துக் கொண்டு 'என்னைப் போல் மூடன் உண்டோ' மூன்று றொட்டிகளை வீணாக்கி விட்டடேனே. முதலிலேயே ஒரு தோசையை வாங்கித் தின்றிருந்தால் பசி ஆறியிருக்குமே' என்று **கூறினான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகுடி பதில்கள்

**தனிமைப்படுத்தலால் ஏதாவது தனிப்பட்ட நன்மையுண்டா?**
கடன்காரர்கள் அடிக்கடி வந்து தொல்லை கொடுத்து மிரட்டுவது குறைந்துள்ளது.
க.தவயுகன், அரியாலை



**இணையவழிக் கல்வி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**
எல்லா மாணவர்களும் அதில் இணைய வழி கிடைக்கவில்லையே! ஏற்படுத்த முடியவில்லையே!
அ.கமலக்கண்ணன், இளவாலை

**இன்றைய உலகமயமாதலை விட்டு சீனா மயமாகிவருவதாக கூறுகிறார்களே?**
தவறு. தற்போதைக்குக் கொரோணா உலகைத் தன்மயமாக்கி வருகிறது என்பதே சரி.
த.துளசிகன், சுன்னாகம்

**தமிழர்களுக்கு அரசியல் உரிமை எப்போது கிடைக்கும்?**
நிச்சயமாக நமது இப்போதைய அரசியல் தலைவர்களின் காலத்தில் கிடைக்கப் போவது கிடையாது.
சி.தனுசன், உருத்திரபுரம்



**உலகப் பொருளாதாரத்தின் வீழ்ச்சி யாரைப் பாதிக்கப் போகிறது?**
திமிங்கிலங்களையும் சுறாக்களையுமல்ல. சிறிய மீன்களையும் குஞ்சு மீன்களையும் தான்.
ம.லோகிதா, அளவெட்டி

**மஹிந்த - பஸில் ராஜபக்ஷக்களில் யார் சிறந்த திறமையான நிதியமைச்சர்?**
யார் கூடுதல் கடனைப் பெற்றுக் கொள்ளும் திறமை கொண்டவராக இருப்பாரோ அவர்தான். புரிந்து கொண்டால் சரி!
ம.அகிலதாஸ், வவுனியா

**வீடுவரை உறவு வீதிவரை மனைவி காடுவரை பிள்ளை கடைசி வரை யாரோ?**
லீசிங் கெம்பனிக் காரனும் கந்துவட்டிக் காரனும் மட்டுமே!
பாக்கியநாதன், கல்லுண்டாய்

**மகுடியாரே நீங்கள் அரசியலில் குதித்தால் என்ன?**
மகுடியாராக இருக்கும் வரையும் எந்தச் செல்வாக்கும் சொல்வாக்கும் அர்த்தம் உள்ளதாக இருக்கும். அரசியல்வாதியானால் இரண்டுமே அர்த்தம் அற்றதாகிவிடும்.




வை.நர்மதா, தனங்கிளப்பு

## சத்தியப்பிரமாணம்

அரிச்சந்திரன்
இன்னும் சாகவில்லை
உயிரோடு
வாழ்கின்றான்...
தந்தக் கோபுரத்தில் இருந்து
ஏழைகளுக்காக...
கதை வடித்துவிட்டு
'யாவும் கற்பனை'
என்று
எழுதுபவனும்
அரிச்சந்திரனே.

## இனியது கேட்கின்...

அரிது... அரிது
மானிடராய்ப்
பிறத்தல் அரிது
என

அன்றோர் புலவன்
இயம்பினுன்
இன்றே
பெரிது பெரிது
மாநிலத்தில்
இடரோ பெரிது...
காசினி கசக்கிறது...
நாசினி இனிக்கிறது...

- வாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மத போதை, மது போதை இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன மதுடியாரே?**
மதுபோதை மனதை மயக்கும் மதபோதை மனிதனையே அழித்துவிடும்.
சு.ராகவன், மருதங்கேணி

**லஞ்சம் வாங்காத அதிகாரிகள் அரசியல்வாதிகள் எவரும் உள்ளனரா?**
நாட்டில் இதற்குத்தான் பெரும் பஞ்சம் தம்பி. அரசியல் வாதிகளால் நியமிக்கப்படும் அதிகாரிகள் உள்ளவரை லஞ்சம் மட்டுமே நாட்டை நிர்வகிக்கும்.
நா.கார்த்திக், தெஹிவளை




**13வது திருத்தச்சட்டம் தமிழ் மக்களை எந்த வகையிலாவது பாதுகாத்துள்ளதா?**
கவிஞர் வைரமுத்துவின் வார்த்தை களில் சொல்வதானால் தமிழன் ஒரு பட்டுவேட்டி கிடைக்கப் போகிறது என்ற கனவில் இருந்த போது கட்டியிருந்த கோவணத் துண்டும் களவு போன கதை தான்.
க.தர்மினி, திருநெல்வேலி

**மதுடியாரே கொரோணா ஊசி போட்டுவிட்டீர்களா?**
சீன ஊசியா, ரஷ்ய ஊசியா, ஜெர்மன் ஊசியா, இந்திய ஊசியா போடுவது எனக்குழம்பிக் கொண்டிருக்கிறேன் தம்பி. இதுதான் நல்லது அதுதான் நல்லது என்று எதனையும் போட விடாது தடுத்து ஊசி போடுகிறவர்கள் தான் அதிகம்.
வெ.பாரதிதாசன், கல்வியங்காடு

**பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இருந்து இலங்கை நளுவிச் செல்வதாக வெளிநாடுகள் குற்றம் சாட்டுகின்றனவே?**
பொறுப்பற்றவர்களிடம் பொறுப்புக் கூறுமாறு வலியுறுத்துவது பொறுப்பற்ற செயலாகத் தெரியவில்லையா?
ப.அனுசன், கொக்குவில்

**சாதி, மதம் பார்த்துக் காதலைக் கைவிடுவது பற்றி?**
சாதிவெறியும் மதவெறியும் காதல் என்கிற அன்புநெறியை மதிப்பதில்லையே! என்ன செய்வது...
சி.சுதாகரன், பூநகரி

**ரணிலின் நாடாளுமன்ற வரவு பற்றி?**
'சிங்க(ம்)' சிங்களாக வந்திருக்கி றார். கம்பீரத்தைக் காணவில்லை.
கி.பவித்திரா, மருதனார்மடம்



## வாழ்வோட்டம்

- ராதேயன்

"வாழ்க்கை என்றால் என்ன?" என்று கேட்டான் ஒருவன். வாழ்க்கை ஒரு 'பொழுதுபோக்கு' என்றான் ஒரு உல்லாசி.
வாழ்க்கை ஒரு 'மாயை' என்றான் துறவி
அது ஒரு 'சூதாட்டம்' என்றான் சூதாடி
வாழ்க்கையா?... அது ஒரு 'கனவு' என்றுவிட்டு தூங்க ஆரம்பித்தான் சோம்பேறி
'மரணத்தை நோக்கிச் செல்லும் ஒரு வழிப் பாதை' என்றான் தத்துவஞானி.
இறுதியாக பதில் சொன்ன தொழிலாளி... 'உனக்கு வேறு வேலையில்லையா... போய் உழைத்து உண்டு உடுத்து, உறங்கி வாழ்ந்து பார் புரியும்' என்று விட்டு தன் தொழிலைத் தொடர்ந்தான்.

**குடாநாடு வாள்வெட்டுக் கலாசாரமாகமாறுகிறதே... இதைப்பற்றி உங்கள் கருத்து?**
கொலை செய்வதைக் கலையாக்க முயற்சிக்கிறார்கள் போலும்
தி.நிதர்சனா, வட்டுக்கோட்டை



**இலங்கையில் நடக்கும் வாரிசு அரசியல் பற்றி?**
வாரிசுகள் நாட்டை முழுமையாக வாரிச்சுருட்டிக் கொண்டுபோய் விடுமே என்ற அச்சம் அரச வட்டாரத்தில் பலமாக நடமாடுகிறது.
பு.மணிமேகலை, சாய்ந்தமருது

**சூடு சொரணைக்கும் நமது தமிழ் அரசியல்வாதிகளுக்கும் என்ன தொடர்பு?**
சூடாகப் பேசுவார்கள் சொரணை இல்லாமல் வாழ்வார்கள்.
பா.லவன்ராஜ், களுதாவளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனைவிக்குப் பயந்த கணவன் எப்படி வாழ்வான்?**

பாதிக்காலம் அடுப்படியையும் மீதிக்காலம் அடிவளவையும் ஆள்பவனாக வாழ்வான்.

உ.கிருத்திகா, பாசையூர்



**நாட்டின் பணப்பிரச்சனைக்கு சீனா நிதியுதவி செய்யக்கூடும். ஆனால் இனப்பிரச்சனைக்குத் தீர்வு எதனையும் தரமுடியுமா?**

சீன மொழியை நாட்டின் அரச கரும மொழியாக்கினால் இனப் பிரச்சனையைத் தீர்த்துவிடலாம் என்று ஆலோசனை சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ம.மைதிலி, பரந்தன்

**வண்ணத்துப் பூச்சிக்கும் பழத்தோட்டத்திற்கும் ஆசைப்படுபவர்கள் மயிர் கொட்டிகளைக் கொல்வது ஏன்?**

கலையை ரசிப்பவர்கள் பலரால் கலைஞர்கள் புறக்கணிக்கப் படுகிறார்களே!

நா.கவினநயா, வயாவிளான்

**சிரிக்கத் தெரிந்தமனிதன் ஏன் அதிகம் சிந்திப்பதில்லை?**

அதிகம் சிந்திக்கும் மனிதனால் இந்த உலகை நினைத்து அழத்தான் முடியுமே தவிர சிரிக்க முடியாது.

சா.சரிமிலா, குடத்தினை

**எப்போது தீரும் சீதனக் கொடுமை?**

திருமணங்கள் தனத்தால் பேரம் பேசும் நிலைமாறி மனங்களால் தீர்மானிக்கும் நிலைவரும் போது.

வா.தரணிதரன், சாவறகாடு

**இந்த நாடு எதை நோக்கிப் பயணிக்கிறது?**

எதனைநோக்கியும் பயணிப் பதாகத் தெரியவில்லை. அந்தர வெளியில் அலைந்து தவிக்கிறது அவ்வளவுதான்!

ம.கோகிலா, தர்மபுரம்

**ஒரு நல்லபுத்தகம் எப்படி இருக்கவேண்டும்?**

கனமான புத்தகமாக இருக்க வேண்டியதில்லை. கனதியான அர்த்தமுள்ள கருத்துக்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

பு.யூட் நிரஞ்சன், பேசாலை

**சங்கீதம் என்பது எப்படியானது?**

இரைச்சல் வடிவானதல்ல இசை வடிவானது. பட்டுக்கோட்டையாரின் துள்ளாத மனதும் துள்ளும் என்ற பாடலைக் கேட்டுப்பாருங்கள். அதன் அர்த்தம் புரியும்.

த.உசாந்தன், நல்லூர்

**சூம் செயலி மூலமானகல்வியால் மாணவருக்குப் பயனுண்டா?**

சூம் செயலிகள் முறையாக முழுமையாகப் பயன்படுத்தப்படா விட்டால் என்ன பயன்? சூம் செயலிகள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளமாணவர்களை எட்டுவதில்லையே..

தா.மதனரூபன், கிண்ணியா

**மனச்சாட்சி, மனோ தர்மம் இரண்டும் ஒன்றா? வேறு வேறு தன்மை கொண்டதா?**


மனோ தர்மம் நியாயத்தை உணர்த்தும். மனச்சாட்சி நியாயம் தவறின் உணர்த்தும்.

தெ.தமிழ் குமரன், நீர்வேலி

**தமிழ் அரசியல்வாதிகள் எப்போது ஒருமித்து செயற்படப் போகிறார்கள்?**

தமிழ் மக்கள் அறிவுபூர்வமாக சித்திக்கத் தொடங்கும் போது!

அன்னலிங்கம் மயூரன், சாவகச்சேரி



## வெங்காயம்

அது என்ன வெங்காயம், என்று யாரும் இனி கூற முடியாது!. ஆமாம் அவ்வளவு சத்து நிரம்பியது வெங்காயம்! 5000 வருடங்களுக்கு முன்பு இறந்த வர்களின் உடலைப்பாடம் செய்யப் பயன்பட்டதாம் வெங்காயம்.

'பிரமிட்'களில் வெங்காய மணம் வீசியதாம்! வெங்காயமும் வெள்ளைப்பூண்டும் கலந்த ஆகாரத்தைக் கொடுத்து, சாட்டையால் அடித்து, அடிமைகளை வேலை வாங்கி கட்டப்பட்ட 5000 வருட பிரமிட்க், இன்றும் உலக அதிசயம். உங்கள் தலை இளமையிலேயே வழுக்கையாகி விட்டதா? தினம் ஒரு பச்சை வெங்காயத்தை (சிறிது) தலையில் தேய்த்துக் குளியுங்கள்! முடி வளரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேட்டியைக் காண பேட்டி கண்டவரே வெளியிடுவதுதான் உலக வழக்கம். இங்கும் பேட்டி கொடுத்த நானே அதனை வெளியிடுகிறேன். இது புதுமைதான்! ஆனால் என்ன செய்வது? பேட்டி கண்டவர் என்ன காரணமோ தெரியவில்லை இதுவரை அதனை வெளியிடவில்லையே! எத்தனை காலமென்று காத்திருப்பது? கடைசியில் இதோ நானே அதனை வெளியிடுகிறேன். "நீங்கள் தான் திருவாளர்...?"

'நன்றாக இருக்கிறது, என்னை யார் என்று தெரியாமலே பேட்டி எடுக்க வந்துவிட்டார் போலிருக்கிறது. கர்மம்! கர்மம்! என மனதுக்குள் திட்டியவாறே பெயரைச் சொல்லித் தொலைத்தேன்.

"நீங்கள் வேறு என்னென்ன புனைபெயர்களில் மறைந்திருந்து எழுதி வருகிறீர்கள்?" "அதையெல்லாம் பகிரங்கப்படுத்துவதாக இருந்தால் 'புனை பெயர்கள்' வைத்திருக்க வேண்டிய அவசியமே இருந்திருக்காதே!"

நிருபரின் முகத்தில் அசடு வழிகிறது. ஒருவாறாகச் சமாளித்துவிட்டுத் தொடர்கிறார்.

"நீங்கள் எத்தனை வயதில் எழுதத் தொடங்கினீர்கள்?"

"இருபது வயதில்"

"எத்தனை ஆண்டுகளாக எழுதி வருகிறீர்கள்?"

"அதாவது என்னுடைய தற்போதைய வயதைக் கேட்கிறீர்களா?" நேரடியாகக் கேட்காமல் இப்படிச் சுற்றி வளைத்துக் கேட்கிறீர்களா?"

"நீங்கள் எழுதி வெளியிட்ட நூல்களின் பட்டியலைச் சொல்லுங்கள்?"

"ஏன் அதுகூட உங்களுக்குத் தெரியாதா?"

"எனக்காகக் கேட்கவில்லை: வாசகர்களுக்காகக் கேட்கிறேன். பேட்டி காண்பவர் தனக்குத் தெரிந்த விவரங்களைத்தான் கேட்கவேண்டும் என்பதில்லை அல்லவா?"

நிருபர் நன்றாகச் சமாளித்து விட்டார். நானும் அவர் கேட்ட பட்டியலை ஒப்புவித்தேன்.

"உங்களது நூல்களில் மிகச் சிறந்ததாக எதனைக் குறிப்பிடுவீர்கள்?"

"ஏன்? அதை மட்டும் படித்துவிட்டுத் தப்பிவிடலாம் எனப் பார்க்கிறீர்களா?".

நிருபரோ விடவில்லை. விடாப்பிடியாகக் கேட்டார். நான் 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதான்' என்ற பழமொழியையும், ஒரு தந்தைக்குத் தனது எல்லாக் குழந்தைகளையும் பிடிக்கும் என்ற உண்மையையும் நினைவூட்டினேன். (பெரும் பெரும் எழுத்தாளர்கள் எல்லாரும் அநேகமாக இப்படித்தானே சொல்லுவது வழக்கம்.)



# என்னையும் ஒருவர் பேட்டி கண்டார்!

"நீங்கள் எதற்காக எழுதுகிறீர்கள்?"

"ஏன் நான் எழுதுவது உங்களுக்குப் பிடிக்க வில்லையா?"

பொ.சண்முகநாதன் நாடறிந்த நகைச்சுவை எழுத்தாளர் ஏராளமான சிறுகதைகள் கட்டுரைகள் மற்றும் நகைச்சுவை விடயங்களை எழுதி தனக்கென ஒரு பெரும் வாசகர் வட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்.

சிரித்திரனையும் இவரது படைப்புக்கள் அலங்கரித்துள்ளன. நகைச்சுவை இலக்கிய படைப்புக்களை உள்ளடக்கிய இவரது பல தொகுப்புக்கள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. முதுமையிலும் இலக்கிய ஆர்வத்துடன் இன்னமும் வாழ்ந்துவரும் இவரது இப்படைப்பு நகைச்சுவை இலக்கிய முன்னோடிகள் எனும் புத்தகத்தில் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைக் கேட்கவில்லை? என்ன இலட்சியத்துக்காக எழுதுகிறீர்கள்?"

நான் தொண்டையைக் கனைத்துக் கொண்டு 'மைக்' கைச் சரி செய்தவாறு - மன்னிக்கவும் 'லெக்சர்" பண்ண ஆயத்தமானேன். அவருக்கு அது பொறுக்கவில்லை போலிருக்கிறது. திடீரென்று அடுத்த கேள்விக்குத் தாவினார்.

"நீங்கள் எழுதத் தூண்டுகோலாக இருந்தவை..."

"நியூஸ் பிறின்ட் காகிதம். அது அப்போது மிகவும் மலிவாகக் கிடைக்கக்கூடியதாக இருந்தது!"

நீங்கள் எழுதக் காரணமாக இருந்தவைகள்...?"

"எங்கள் வீட்டில் 'குழந்தைகள்' கிடையாது. பக்கத்து வீட்டில் 'ரேடியோ'இல்லை-முன் வீட்டுக்காரர்களுக்கு 'மியூசிக்' தெரியாது".

"உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர்கள் யார்?"

"சிலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கும் என்னைப் பிடிக்குமா என்பதை அறிந்த பின்னர்தான் பெயர்களை வெளியிட முடியும்!"

"உங்களுக்குப் பிடித்த புத்தகம்...?"

"உணவுப் பங்கீட்டுப் புத்தகம்!"

"உங்களை நேரில் சந்தித்து உங்கள் எழுத்தை யாராவது பாராட்டினால் என்ன செய்வீர்கள்?"

"பக்கத்திலுள்ள தேநீர்க் கடைக்கு அவரை அழைத்துச் சென்று தேநீர் வாங்கிக் கொடுப்பேன்!"

"அப்படியின்றியாராவதுகுறைத்துமதிப்பிட்டால்...?"

## Mrs. டாமோடிரன்



**Mrs டா** : டார்லிங்
**Mr டா** : யேஸ் டார்லிங்
**Mrs டா** : இன்று பாரதி இருந்திருந்தால்
**Mr டா** : பெற்றோல் உள்ள நாட்டைத்தான் "மணி"த் திருநாடு என்று பாடுவார்.
**Mrs டா** : யேஸ் யேஸ் அப்படித்தான் சிங் பண்ணுவார்.

"அவர் ஏன் தேநீர் குடிப்பதில்லை என்ற காரணத்தை அறிய முயல்வேன்."

"அடுத்து நீங்கள் என்னென்ன நூல்கள் வெளியிடப் போகிறீர்கள்?"

"அதையெல்லாம் சொல்லி உங்களை இப்பொழுதே பயமுறுத்த விரும்பவில்லை!"

"எழுதுவதன் மூலம் நீங்கள் எவ்வளவு பணம் சம்பாதித்து வருகிறீர்கள்?"

"ஏன் நீங்களும் எழுதப் போகிறீர்களா?"

"அதற்காகவல்ல, அதை நாம் அவசியம் தெரிந்தாக வேண்டும்!"

"நானும் ஒன்று தெரிந்தாகனும். நீங்கள் பத்திரிகை அலுவலகத்திலிருந்துதான் வருகிறீர்களா? அல்லது பங்கீட்டு அட்டை மீளாய்வுக்காக வருகிறீர்களா?"

அவர் பத்திரிகை அலுவலகத்திலிருந்துதான் வருகிறார் என்பது உறுதியானதும் 'வருமானம்' பற்றிக் கொஞ்சம் அதிகமாகவே புளுகி விடுகிறேன்.

"எழுத்துலகில் உங்களால் மறக்க முடியாத ஒரு சம்பவத்தைக் கூறுங்கள்?"

"இப்பொழுது என்னைப் பேட்டி காண நீங்கள் வந்திருக்கிறீர்களே - அதைச் சொல்லலாம்!"

"எங்கள் பத்திரிகை பற்றி உங்கள் கருத்து என்ன?"

"உங்கள் பத்திரிகை எனது கருத்தை வெளியிடத் துணிந்து விட்டதல்லவா? அதனால் அதற்கு நல்ல எதிர்காலம் இருக்கும் என்பதை நிச்சயமாகச் சொல்லலாம்."

இதுதான் பேட்டி விவரம். பேட்டி கண்ட நண்பர் எதற்காகத் தனது பத்திரிகையில் இதனை வெளியிடவில்லை என்று புரியவில்லை. இப்பொழுது எங்கிருந்தாலும் இதனை வெளியிட்டதற்காக என்னை மன்னிக்க வேண்டும்.

## வந்தாளே மகராசி

மகனின் திருமணம் இனிது நிறைவேறிய மகிழ்ச்சித் திழைப்பில் இருந்த அந்தத் தாயிடம் நான் கேட்டேன்.

"இனி என்ன கஸ்டம் உங்களுக்கு மருமகள் வந்திட்டாதானே"

"ஆமாம் எனக்கு ஒரே கஸ்டம்தான் இருந்தது. அதுவும் இன்றோடு தீர்ந்துவிட்டது"

"என்ன கஸ்டம் நான் வியப்போடு கேட்டேன்"

"இவ்வளவு காலமும் இரவில், மகன் தவறணையால் வரும் வரையும் வெகுநேரம் கவலையுடன் காத்திருக்கவேண்டிய கஸ்டம் இனி எனக்கு இல்லை..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆவணி விகடங்கள்




ஜயா! ஜயா! மனிசியைக் காணேல்லை

***இது திருமண மண்டபம். இங்கை ஏன் ஓடி வாறீங்கள்?***

சந்தோஷத்திலை எங்கை போறதெண்டு தெரியல்லை.




**ஆவணிக்கு கல்யாணம் என்று சொன்னாய்**

**எங்கே ஆளையே காணேல்லை?**

அது ஆடி மாதமே முடிஞ்சுது.

**ஏன் என்ன நடந்தது?**

மனிசி ஊசி போடததால் கொரோணா வந்தாலும் வருமெண்டு போன மாசமே செய்தாச்சு.




***ராமு : ஆவணிச் சதுர்த்தி விரதம் இருந்தாரே எப்படி பலன் கிடைச்சது?***

சோமு : தொடர் விரதமாய் பலன் கிடைச்சது.


***ராமு : ஏன் என்ன நடந்தது?***

சோமு : கொரோணா வந்து தனிமைப்படுத்தலில் அவருக்கு கஞ்சியும் கூழும் தான் குடுக்கினமாம்.




காதலி : ஆடித் தள்ளுபடியில வாங்கின கார் எங்கை

***காதலன் : ஆவணி நட்டத்தால வித்திட்டன்***



***தம்பர் : ஆவணி மாசம் கல்யாணம் செய்தால் நல்லமாமே!***

*வம்பர் : என்னைப்பார் நான் நல்லாவா இருக்கிறன் நானும் ஆவணி மாசத்திலதான் கல்யாணம் பண்ணினனான்.*



**இந்த முறை ஆவணிக்கே நல்ல மழை பெய்யும் போல**

**எதை வைச்சுச் சொல்லுறியள்.**

**மாநகர கால்வாய் எல்லாம் திடீர் எண்டு சுத்தம் செய்யினம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோசிய ஹாஸ்யம்

**சண்முகம் : சாத்திரியாரே எனக்கு எப்போது திருமணம் நடக்கும்?**


ஜோதிடர் : கிரகங்கள் பெரும்பாலும் நல்ல நிலையில் உள்ளதால் இந்த வருட இறுதியிலோ அல்லது அடுத்த வருட ஆரம்பத்திலோ நடக்க வாய்ப்புக்கள் உண்டு. இருப்பினும் அடுத்த வருட ஆவணிக்குள் கடுமையாக முயற்சித்தால் பலனுண்டு.

**சண்முகம் : பெண் எப்படிப்பட்டவளாக இருப்பாள்?**

ஜோதிடர் : படித்தவளோ அறிவாளியாகவோ இருக்கக் கூடும். கிரகங்களைப் பார்த்தால் பெண் அரசாங்க உத்தியோகம் அல்லது தனியார் துறையில் பணிபுரிபவராக இருக்கக் கூடும்.

**சண்முகம் : அதுசரி எனது தொழில் வளர்ச்சி எப்படியிருக்கும்?**

ஜோதிடர் : அரச உத்தியோகத்திற்குப் பலனுண்டு. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரகாசமாய் உள்ளது. சொந்தத் தொழிலும் கைகொடுக்கக்கூடும். எதுவானாலும் முயன்றால் வெற்றியுண்டு.



**சண்முகம் : என்ன ஜோதிடரே எதற்கெடுத்தாலும் தெளிவான உறுதியான முடிவாக எதனையும் சொல்கிறீர்களில்லையே! முதல் எங்கு வேலை செய்தனீங்கள் ?**

ஜோதிடர் : வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் வேலை செய்தேன்...

**சண்முகம் : ??!!**

# பழமொழிகளும் அதன் அர்த்தங்களும்!

கிராமங்களில் ஒரு சில செயல்களைக் குறிக்கவும், கருத்துச் சொல்லவும், விழிப்பு ணர்வு ஏற்படுத்தவும் நம் முன்னோர்கள், பழமொழிகளை கூறி வந்தார்கள்.

பழமொழி என்பது ஏதாவது ஒரு செயலைக் குறிக்கவோ, ஒரு செயலுக்கு விளக்கம் தரவோ சொல்லப்படுகிறது. பழமொழிகள் அனு பவத்தின் ஊடாக உருவாகி அறிவுரையும் சொல்லும்.

புழக்கத்தில் உள்ள பல பழமொழிகளுக்கு அதற்குரிய அர்த்தங்கள் சொல்லப்படாமல், நாளடைவில் மருவி வேறு ஏதோ அர்த்தங்கள் சொல்லப்படுகிறது. அவ்வாறு சொல்லப்படும் சில பழமொழிகளின் சரியான விளக்கங்களைத் தேடிப் படித்து இங்கு பகிர்ந்துள்ளோம்..

**ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.**

**பொருள் :** மற்றவர்கள் பிள்ளையை ஊட்டி வளர்த் தால் உன் குழந்தை தானே வளர்ந்து விடும்.

**உண்மையான பொருள்:** ஊரான் வீட்டு பிள்ளை யாகிய உன் கர்ப்பிணி மனைவியை பாசத்துடன் ஊட்டி வளர்த்தால், அவள் வயிற்றில் இருக்கும் உன் குழந்தையும், ஆரோக்கியமாக தானே வளரும் என்பதே உண்மையான பொருள்.

**கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை.**

**பொருள் :** கழுதைக்கு கற்பூர வாசம் தெரியாது.

**உண்மையான பொருள்:** 'கழு தைக்க தெரியுமாம் கற்பூர வாசனை'.

கழு என்பது ஒரு வகை கோரைப்புல். அதில் பாய் தைத்து படுத்துப் பார்த்தால் கற்பூர வாசனை தெரியும் என்பதே சரியான விளக்கம்.

**ஆயிரம் பேரை கொன்றவன் அரை வைத்தியன் ஆவான்.**

**பொருள் :** ஆயிரம் மக்களை (நோயாளிகளை) கொன்றவன் பாதி வைத்தியன்.

**உண்மையான பொருள் :** ஆயிரம் வேரை கொண்டவன் அரை வைத்தியன் ஆவான்.

நோயை போக்க ஆயிரம் வேரை கொண்டு மருந்து கொடுப்பவன் அரை வைத்தியன் ஆவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் அப்பம்



## உணவும் உறவும்

எப்பவும் அப்பம் சுடுவது என்றால் அம்மாவின் தோரணை மாறிவிடும். முதல் நாள் காலமையே அரிசி ஊறப் போடுவதில் இருந்து மறு நாள் அப்பம் சுட்டுத் தரும் வரையில் அம்மாவின் எண்ணம் எல்லாம் அப்பத்திலேயே இருக்கும்.

அதிலும் விசேஷமாக விடுமுறை நாட்களில்தான் அப்பத் திருவிழா எங்களுடைய வீட்டில் நடக்கும். அது எப்ப வாச்சும் ஒரு நாள்தான். அதுக்கெண்டே அம்மாவுக்குச் சீதனமாய்க் கொடுத்த அப்பசட்டி என்ற சிறு இரும்புச் சட்டியை அம்மா கவனமாய் வைத்திருப்பாள். ஏனென்றால் அம்மம்மாவுக்கும் அது சீதனமாகக் கிடைத்ததாம்.

அந்தச் சட்டியில் வேறு எதுவும் சமைத்தால் அப்பம் சுடும் போது பதம் இல்லாமல் ஒட்டிப் பிடித்து விடுமாம். அதனால் அதற்கு அப்பச் சட்டியென்றே வீட்டில் பெயர் வைத்தாகி விட்டது. அப்பம்சுடுவதற்கும்கள்ளு முக்கியம்; அப்பாவுக்கும் கள்ளுத்தான் முக்கியம். அப்பத்துக்குக் கள்ளு வாங்க அப்பாவை விட்டால் அப்பம் சாப்பிடுற அனைவருக்கும் ஏமாற்றம் தான் மிஞ்சும். அதனால் கள்ளு வேண்ட நான்தான் போறனான். அதிலும் நேற்றையான் முந்த நாளையான் பழைய புளிச்ச கள்ளுக்குப் பெரிய மதிப்பு. அந்தக் கள்ளு மண்டியை கந்தையா அண்ணை தேவலோக அமிர்தம் போல அற்புதமாய்ப் போத்தலில் வார்த்துத் தருவதில் கை தேர்ந்தவர்.



கள்ளு மண்டிய கொண்டு வந்து கொடுக்கிற தோடை என்ரை வேலை சரி அடுத்த நாள் அப்பம் சுட்டு தரும் வரைக்கும் சிவபட்டிணி பசிச்சாலும் எதையும் சாப்பிட ஆசை வராது. அம்மா அப்பம் எப்பிடிச் சுடுறதெண்டு நான் ஒரு நாளும் கேட்டதில்லை. சித்தி ஒரு நாள் அப்பம் சுடத் தொடங்கி சித்தின்ரை முகம்தான் கடைசியா அம்பம் மாதிரி வீங்கினது. காரணம் சித்தி ஊத்தின அப்பம் ஒண்டும் சரியா வராம தாச்சில ஒட்டி பெரிய பாடுபட்டு அண்டைக்கு கடைசியா எல்லாரும் பாணும் வாழைப்பழமும் சாப்பிடுற நிலைமை தான் ஏற்பட்டது. பிறகொரு நாள் அம்மா தான் சித்திக்கு அப்பம் எப்பிடி செய்யிறதெண்டு சொல்லிக் குடுத்தவா.

அப்பம் செய்யிறதுக்கு முதலில் இட்லி அரிசி மற்றும் பச்சரிசியினை ஒரு பாத்திரத்தில் போட்டு இரண்டு மணிநேரம் ஊறவைக்க வேணுமாம்.

நன்றாக அரைந்தவுடன் அதனுடன் ஊறவைத்த அரிசியினையும் கொட்டி அரைக்கவும். பிறகு அதனுடன் தேங்காய் மற்றும் சமைத்த சாதம் போன்றவைகளையும் நன்றாக அரைக்கவும். அரைத்த மாவினை ஒருகிண்ணத்தில் ஊற்றி சிறிது கள்ளையும் சேர்த்து புளிக்க வைக்கவேண்டும். எட்டு மணிநேரம் கழித்து அதனுடன் தேவை யான அளவு உப்புச் சேர்த்து நன்றாகக் கலக்கவும். தற்போது ஆப்பம் செய்யத் தேவையான மா தயாராகிவிட்டது. இதனை அப்பச்சட்டியில் ஊற்றி மெலி தாக எண்ணெய் ஊற்றி ஒரு பக்கம் வேகவைத்து எடுத்தால் சுவையான அப்பம் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"லண்டனிலிருந்து மூலை முடுக்கெங்கும்
உள்ள எம் ஆளுமைகளைத்
தேடும் ஒரு பயணம்..."

உலகை வலம் வரும்
உற்சாகம்
வெற்றிநடை

செய்திகளை உடனுக்குடன் பார்வையிட...

WWW.VETRINADAI.COM

செய்திப்பக்கம் ; சமூகப்பதிவு ஆய்வு ; விளையாட்டு ; உரையாடல்
நிகழ்வுகள் ; வாழ்த்துக்கள் ; உலக சாதனைகள் மற்றும் பல...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தியடிச் சமாச்சாரம்

– பரதன் சாமி



**காராளி** – உனக்கு எல்லாத்துக்கும் நக்கலாப் போச்சு நான் எத்தினை கடைக்கு ஒரு கிழமையா ஏறி இறங்கீட்டன் தெரியுமே! கிடந்த போன் எல்லாம் சூம் வகுப்புகளுக்கும் போற பெடியள் வேண்டிப் போட்டுதுகளாம் இப்ப போனுக்கும் தட்டுப்பாடு வந்திட்டிது.

**மணியம்** – போன்தானே! உன்னட்டை கிடக்கிற போனைக் குடன் ரீச்சர்மாரோடை கதைச்சு படிக்கத்தானே?

**காராளி** – மணியம் நீ எல்லாருக்கும் அறிவுரை சொல்லுறனி இது உனக்குத் தெரியாதா? இது போனிலை நடக்கிற சூம் வகுப்பு எண்டு சொல்லி அதுக்கு கமரா உள்ள பெரிய போன் வேணுமாம்.

**மணியம்** – எட அப்பிடியே சங்கதி? நானும் கேள்விப் பட்டனான்தான். எனக்கு உது புடிபடேல்லை. உதாலை எப்பிடி பெடியள் படிக்கிதுகளே பிரியோசனமாக் கிடக்கே?

**காராளி** – உந்த போனுகளை வாங்கிக் குடுங்கோ எண்டு சொல்லி ரீச்சர்மார் ஒரே ஆக்கினையாக்கிடக்கு. ஆனால் பெடியள் கொஞ்ச நேரம் படிக்கிறதும் பிறகு படம் பாக்கிறதும் எண்டு போனிலையே மினக்கடுதுகளாம்.

**மணியம்** – சரியாச் சொன்னாய். எங்களை மாதிரி வயது வந்ததுகளே போன் கிடைச்சா விடுதுகள் இல்லை. சின்னனுகள் சொல்லுக் கேக்குமே? அதுசரி போனுகளைப் பிள்ளையளின்ரை கையிலை குடுக்க வேண்டாம். எண்டு சொல்லுற வாத்திமாரே இப்ப போனை வேண்டிக்குடு எண்டு சொல்லறதுதான் வேடிக்கையா இருக்கு.

**மணியம்** – என்ன காராளி உன்னை நானும் ஒருகிழமைக்கு மேலை தேடிக்கொண்டிருக்கிறன். மனிசி சொல்லுறாள் நீ ரவுணுக்குப் போட்டியாம் எண்டு. அப்பிடி என்னடா உத்தியோகம் உனக்கு ரவுணில?

**காராளி** – அதை ஏன் கேக்கிறாய் மணியம். என்ரை பேரப் பெடியன் ஒருத்தன் இந்த முறை கொலசிப் எடுக்கிறான். இப்ப அவனுக்கு படிப்புகள் எல்லாம் போனிலைதானே நடக்கிது. ஒரு போன் வேண்டுறதுக்கு தேடித்திரிஞ்சனான் ஒரு கிழமையா.

**மணியம்** – அதுக்கேன் தேடித்திரியிறாய் யாழ்ப்பாணத்திலை எத்தினை விதமான போன் கடையள் கிடக்கு ஒண்டிலை வேண்டுறது தானே?

**காராளி** – நீ 'சும்மா நினைச்ச மாதிரிக் கதைக்காதை இப்ப முந்தியை மாதிரிக் காலமில்லை'. இது 'கொரோணா' காலம். இந்தக் காலத்திலை புடலங்காயிலை இருந்து போன் வரைக்கும் எல்லாம் சரியான விலை, சிலதுகள் வரத்துமில்லையாம்.

**மணியம்** – போனுக்கு வரத்தில்லை எண்டுறதை ஓரளவு ஏற்றுக்கொள்ளலாம் புடலங்காய்க்கு வரத்தில்லை எண்டுறதை எப்படி ஏற்றுக்கொள்ளுறது எண்டுதான் தெரியேல்லை. கனபேர் புடலங்காயை வைச்சுக்கொண்டு விக்கமாட்டாமல் திரியினம்.



**வாக்காளர் :** அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறதே நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

**அரசியல்வாதி :** ஆர்ப்பாட்டம், பேரணி போராட்டம் கொடும்பாவி எரிப்பு உண்ணாவிரதம் என எத்தனையோ வேலை இருக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகனம்




நடராஜா சத்தியபாலன்,
நல்லூர் யாழ்ப்பாணம்.

ஒரு சொல் தான் ஒரே சொல். கோபத்தின் உச்சத்தில் எரிச்சலின் அதிகரிப்பில் எனக்கே உருப்பெற்று சுருக்கெனத் தைக்கிற கூரம்பாய் என் இதயத்தை ஊடுருவி அதையும் தாண்டி என்னுள் எங்கையோ குத்திக் கிழித்து.

சொட்டுச் சொட்டாய் விழுகிறது குருதி கீறிய வாய்க்காலில் விரைந்தோடுகின்ற இறைப்பு நீராய் ஓடிக் கொண்டிருக்கிறது கண்ணீர்.

இயந்திரமாய் என் வேலைகளிற் பொருந்தி யிருக்கிறேன் வீடு சுத்தமாகிறது. துணிகள் கழுவப்பட்டு கொடியில் தொங்குகின்றன. சமையல் நடந்து முடிகிறது. இளங்காலை முதிர்ந்து, வெயிலேறி, மதியப்பொழுதுமாகி வெயிலோடு நீண்டு இன்னும் சில மணிப் பொழுதிலே நீ வந்து விடுவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






நவீன ஈழத்தமிழ் இலக்கிய களத்தில் ஒரு தவிர்க்க முடியாத தனித்துவ ஆளுமை கொண்ட பன்முகப்படைப்பாளியாக கடந்த சில தசாப்தங்களில் தன்னை ஆழமாக பதிவு செய்து கொண்டிருப்பவர் திரு.ந.சத்தியபாலன் அவர்கள். அமைதியையும், ஆழத்தையும் தனித்துவ பண்பாகவும் கொண்ட இவரது படைப்புக்கள் யாவும் கனதியான வாசகர்களின் கவனிப்புக்குரியவையாக தொடர்ந்து இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

சிறுகதை, கவிதை, மொழிபெயர்ப்பு. விமர்சனம் என இவரது ஆளுமை வெளிப்பாடு பலவகைப்பட்டது.

ஆரவாரப்படாமல் அர்த்தமுள்ள படைப்புக்களை உருவாக்கிவரும் திரு.ந.சத்தியபாலனின் இச்சிறுகதை இம்மாத கதை அமுதத்தில் உங்களுக்கு விருந்தாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குத் தேநீர் தந்து இரவு உணவு தயாரித்து, இப்படியாய் பகலும் இரவுமென நீளத்தான் போகின்றது நம் காலமும் நினைவுகளின் தொடர்ச்சியை ஊடறுத்து எழும் அந்த வலி

மறக்க முடியாத அந்த ஞாபகம் உனது கோபம் படபடத்து நீ உதிர்த்த வார்த்தைகள் சினம் பொங்க நீ சொன்ன அந்தச் சொல் அதன் கொடூரம்

அதற்கெல்லாம் காரணமான சம்பவங்கள் இந்தத் துயருக்கெல்லாம் காரணமான எனது நிலை எல்லாம் வரிசை வகுக்கின்றன. மனதில் முன்னரே ஒருவரை ஒருவர் அறிந்திருந்த நீயும் நானும் திருமணத்தில் ஒன்றானதும்

ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள நேர்ந்த மகத்தான கணங்களின் இருவர்களுக்கிடையிலான ஒன்றிப்பின் எதிரொலிப்பில் பூச்சுக்கள் உதிர்ந்த பச்சையான இருமை அழிதலின் மயக்கங்களைத் தாண்டி இரண்டு நான்களின் கரைதலில் மலர்ந்த நிறைவில் முழுமையுற்றதாய் நான் உணர்ந்ததும்

நாம் மணம் செய்து ஒருவருடம் பூர்த்தி ஆக முன்னரே குழந்தையொன்று பற்றிய உன் எதிர்பார்ப்பை நான் புரிந்து கொண்ட போது என்னுள் கனிந்த தாய்மை உன்னையே ஒரு குழந்தையாக்கித் தன்னுள் ஏந்திக் கொண்டதும்

வருஷங்கள் இரண்டு கடந்த பின்னரும் என் கனவை நனைவாக்கும் பாக்கியம் கிடைக்கத் தவறியதில் நாம் இருவரும் வைத்தியசாலை போனதும் பரிசோதித்துக் கொண்டதும்

மனமொப்ப முடியாத பேரதிர்ச்சியாய் அந்த உண்மையை எதிர்கொள்ள இயலாமல் நான் மயங்கிச் சாம்பியதும் நீ உள்ளூர உடைந்து வதைபட்டதும் நான் ஒருபோதும் தாயாக முடியாதுதென்னும் உண்மை உன்னை விட என்னை அதிகம் துயருறுத்தும் என்று புரிந்த கணத்தில் நீ எனக்கொரு உறுதியான ஆதரவாய் ஆனதுவும், என்னை எந்த விதத்திலும் நோக விடாமல் ஏந்தி வைத்துப் பேணியதும் பதினெட்டு வருடங்களைத் தாண்டிய எமது தாம்பத்திய வாழ்வின் சுவடுகளாய் இதயத்தில் நிலை கொண்டிருக்கையில் எவ்வாறு உன்னால் அவ்விதம் பேச முடிந்தது? நீ எப்படி அந்த விதம் பேசலாம்?

அந்த
உண்மையை
எதிர்கொள்ள
இயலாமல்
நான்
மயங்கிச்
சாம்பியதும்
நீ உள்ளூர
உடைந்து
வதைபட்டதும்
நான்
ஒருபோதும்
தாயாக
முடியாது
என்னும்
உண்மை
உன்னை விட
என்னை
அதிகம்
துயருறுத்தும்

நம் வாழ்க்கை இப்படித்தான் எனத் தெளிவான போது நாம் இருவருமே அதை மனம் ஏற்றுக் கொண்டோமே. பட்டும் படாமலும் சில சமயம் நேரிடையாகவும் என்னை மற்றவர்கள் குத்திக் காட்டியபோது என் மனதை ஆற்றியதே நீதானே

யாரோ ஒரு நண்பர் குழந்தையொன்று தத்தெடுக்கும் யோசனையை தெரிவித்தபோது நீ ஏனோ? அதை முற்றாக மறுத்தாய். எங்கள் வீடு உனது அண்ணனுடைய குழந்தைகளுக்கும் தங்கையின் குழந்தைகளுக்கும் நந்தவனம் ஆனது. மாமா என்றும் சித்தப்பா என்றும் ஓடிவரும் அந்த குழந்தைகளே நமது மகிழ்ச்சிக்கு ஆதாரமானார்கள்.

அவர்களின் மகிழ்ச்சி எமது மகிழ்ச்சியானது. அவர்களின் துயரம் நமது துயரமானது. உன் அண்ணனின் கடைசிப் பையன் கொடிய காய்ச்சலில் அந்தச் சிறுவயதில் உயிர்விட நேர்ந்த போது நாம் துடித்த துடிப்பினை என்னவர்களும் உன்னவர்களும் நன்கு அறிவார்களே.

இன்னார் பிள்ளை என்றில்லாமல் எவர் வந்தாலும் ஏற்றுச் சீராட்டிக் கொண்டாடி ஒரு தாயென மகிழ்ந்த என்னை மற்றெல்லோரையும் விட மேலாய் நீயே புரிந்து கொண்டவள். என் மனம் நிறைந்திருந்தேனே உனது சின்னச் சின்ன மகிழ்ச்சிகளையும் ரசனைகளையும் இனம் கண்டு காரிய மாற்றினேனே. குழந்தைகளைப் போலவே நீ நேசிக்கின்ற உனது புத்தகங்களை கலைப் பொருட்களை ஓவியங்களை ஒவ்வொன்றாய் தெரிந்து நீ வாங்கிவந்து பொருத்தமான இடம் பார்த்து அவற்றை வைத்து விட்டு ஒவ்வொரு கோணத்தில் அதை ரசிப்பதை எத்தனை நாள் நான் ரசித்து இருக்கின்றேன்.

இப்படித்தானே அந்தக் கண்ணாடிப் பொம்மையும் வீட்டுக்கு வந்தது தவழ்ந்த நிலையிலிருக்கிற அந்த வெளிர் நீலக்கண்ணாடிப் . பொம்மை அதில் உனக்குச் சொல்லி மாளாத ஆசை நீ சொல்லிச் சொல்லி ரசித்து ரசித்து அதில் நீ எனக்கும் ஒரு மயக்கம். உனது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளாஸ்பேபியைத் துடைக்கின்ற போது நான் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருந்திருக்கிறேன் தெரியுமா?
நேற்று கூட அப்படித்தான் வழக்கம்போல கூட்டி முடித்துத் தூசி துடைத்து முடிந்து நிமிர்ந்தபோது ஐதீஸ் வந்தான். உனது தங்கையின் கடைசி மகன். எங்கள் யாவரினதும் செல்லக்குழந்தை. பத்துவயது பால்முகம் அழகாய் விரியும் விழிகளின் எழில் மனசள்ளும் "எனக்கு இண்டைக்கு ஸ்கூல் லீவு அத்தை வீட்டை போறனெண்டு சொல்லிப்போட்டு வந்தனான்.."
"அண்ணாமார் அக்கா எல்லாம் ஸ்கூல் போட்டினமோ"
ஓ எல்லோரும் போட்டினம் அவையள் பெரிய வகுப்புத்தானே
"எனக்கு நேத்து ஸ்போட்ஸ் நடந்ததால் இண்டைக்கு லீவு. குஞ்சு ஒண்டிலையும் பங்குபற்றல்லையோ?"
"நான் லோங் ஜம்ப் செய்தனான்"
"பான்சிட்றெஸ் பரேட்டிலும் இருந்தனான்"
ஜம்ப்பில் நான் தான் முதல் பான்சிட்றெஸில கிடைக்கேல்ல
இதைச் சொல்லுகையில் அவன்முகம் வாடக்காண்பதே சகிக்கவில்லை. பேச்சை மாற்றினேன். அண்ணாக்களும் அக்காவும் வந்தவையளோ ஸ்போட்ஸ்பாக்க?
"ஓ அம்மாவும் வந்தவ"
நான் சமையலில் இறங்க அவன் தன்பாட்டில் ஏதோ விளையாடப் போய் விட்டான்.
இடையில் அவனுக்குப் பிடித்தமான மைலோவில் கூல்ட்ரிங் தயாரித்து விட்டுக் குடிக்க அழைத்தேன்.
சந்தோஷத்தோடு இருகையாலும் கோப்பையை வாங்கி ரசித்து ரசித்துக் குடித்தான்.
சந்தோஷத்தில் ஒளிர்ந்த அவனது முகத்தின் பிரமையில் மயங்கினேன். மனசுகனிய அவனது தலையை வருடிக் கொடுத்தேன்.
இந்த நிறைவுகளை நாடித்தான். ஒரு பெண் தாய்மைப் பேற்றுக்கு ஏங்குகிறாளா? பிள்ளையள் குழைவில் பரிவு தேடலில் மெத்தென்ற அதன் மென்மையில் மனசும் உடலும் பொங்க உள்ளூர ஏதோ பெருகி நிறைகிறதே என்ன அது?
நான் சமையல் காரியங்களில் மீண்டும் இறங்கினேன். அவன் வெளியே விளையாடப் போனான். கைகள் காரியத்தில் ஈடுபட்டபடி இருந்த போதும் மனசு அவனிடமிருந்தது. செல்லம் கொஞ்சுகிற அவனது குரல் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.
எதிர்பாராத ஒரு கணத்தில் என் மனதின் லயிப்பைச் சிதறடிப்பதாய் வெளியே 'சிலீர்' என ஒரு சத்தம். ஏதோ ஒன்று விழுந்து சிதறியது போல் நான் வெளியே ஓடினேன் குழந்தைக்குத்தான் ஏதும் ஆகிவிட்டதா எனப்பதறியது மனசு.
வெளி மண்டபத்தில் ஜதீஸ் இருந்து விளையாடிய இடத்துக்குப் போன போது அவன் இல்லை. ஜதீஷ் என்று அழைத்தபடி திரும்புகையில் புத்தக அடுக்குகளின் அருகே கீழே விழுந்து சுக்கல் சுக்கலாயச் சிதறியிருந்தது உனது பிரியத்துக்குரிய கண்ணாடிப் பொம்மை சிதறல்களுக்கு நடுவே திகைப்பிலும் பயத்திலும் உறைந்த ஜதீஸ் "என்ர கடவுளை இதென்ன நடந்தது" சிலகண நேரங்கள் என்னால் தொடர்ந்து எதுவும் பேச முடியவில்லை.
குழந்தை கண்ணாடி உடைவுகளுக்கு நடுவே நின்று கொண்டிருக்கின்றான் என்ற விஷயம் அறிவில் உறைக்க சிறிய நேரமாயிற்று.
"கவனமாய் முதலில இஞ்சாலவா... பிசுங்கான் காலில குத்தப்போது" முன்புறமாய் அந்த உடையல்களைத் தாண்டி வந்தவன் தலைகுனிந்தபடி நின்றான். "என்ன நடந்தது" "சும்மா தூக்கிப் பாப்பமெண்டு எடுத்தன் வழுக்கி கீழே விழுந்து விட்டது".
உனக்கு வேறு சாமானும் இல்லையா எடுத்து விளையாட.
கண்ணாடி சாமான்கள் தவறினால் உடைந்து போகும் என்று உனக்குத் தெரியாதா நீ என்ன பச்சைக் குழந்தையா அந்த இனிய பொருளின் இழப்பில் விளைந்த ஆதங்கத்தில் படபடத்தேன். மீண்டும் அந்த சிதறல்களைப் பார்க்க மனம் நொந்தது எல்லாவற்றையும் என்னால்

## எங்கே மனிதநேயம்?

புன்னகைக்கும் முகங்களுக்கு
பின்னால்
புரிந்து கொள்ள முடியாத
பல போலி முகமூடிகள் –
பாசாங்கு செய்த வண்ணம்!

தித்திக்கும் வார்த்தையாலும்
தேனொழுகும் பார்வையாலும்
நடித்து கொண்டிருக்கின்றது – இந்த
நாடக மேடையென்ற உலகு!

ஐம்பது ரூபாய் போடல –
பிச்சைக்காரனுக்கு!
ஐம்பதாயிரத்தில் அன்றோயிட்
போன் எதுக்கு?

கொட்டும் மழையில்
கூத்தாடும் போது வந்த தும்மல்
இப்ப
கொரோனா காலத்தில் வந்தால்...
அது பெரிய வம்பில்!

என்ன நடந்தாலும்
எட்டிப்பார்க்கா உலகு...
கொரோனா வரவால்
பக்கத்து வீட்டுக்காரனிடம்
நல விசாரிப்பு!

இனியும் வேண்டாம்
உண்மையில்லா வார்த்தை!
உயிரில்லா புன்னகை!!
துணையில்லா தனிமை!
வேண்டும் வேண்டும்
தூக்கமில்லாத் தூக்கம்!
வேசமில்லாப் பாசம்!
மோசமில்லா நம்பிக்கை!
காசில்லா உறவு!
களவில்லா நட்பு!

ஈரமான இதயம் கொண்டு
இன்பமாய் வாழ
தேடுவோம் மனித நேயத்தை!
நாடுவோம் மனித மாண்பை!!
இனியொரு கொரோனா வராமல்
இருக்க...!

– ஜோன்சலா வைத்தியாம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டித் தவிர்த்த போது கண்ணீரை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. எனது கண்ணீர் அவனை அதிர்ச்சியடைய வைத்திருக்க வேண்டும்.

அவன் விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தான் "நீ என் ராசா அழுகிறாய் போய் ஓரிடத்தில் இரு" என்று சொல்லிவிட்டுக் கூட்டி அள்ளிய கண்ணாடிச் சிதறல்களை அடி வளவில் கொட்டிவிட்டு வரச் சென்றேன். பயந்து போய் விட்ட குழந்தையை எப்படியும் சமாதானம் செய்து விட வேண்டும் என்ற எண்ணத்தோடு உள்ளே வந்தேன்.

முன் விறாந்தையில் அவன் இல்லை. வாசலில் முன்புற தோட்டத்தில் எங்கும் அவன் இல்லை. ஜதீஷ் ஜதீஷ் என்று என் உரத்த குரல் அழைப்புக்கும் எந்தவித பதிலும் இல்லை. பயத்தில் உறைந்து விட்டேன். நான் அவசரமாய்ப் புறப்பட்டு அவள் வீட்டுக்கு ஓடினேன். லதாங்கி என்ற முகற் குரலில் கதவு திறந்து கொண்டது.

"ஜதீஷ் வீட்ட வந்துட்டானா லதா?" "ஓம் அழுது கொண்டு வந்து அங்க உள்ளுக்க படுத்திருக்கிறான். ஐயோ பிள்ளை பயந்துட்டான். ஒருநாளும் நான் அவனைக் கடுமையாக ஒன்றும் சொல்வதில்லை. உள்ளே சென்றேன் தலையணையில் முகம் புதைத்து அழுகின்ற அவனைக்காண வேதனை பொங்கிற்று. குஞ்சு என் ராசா சொல்லாமல் ஓடி வந்துவிட்டாய். அத்தையில கோவமே பிள்ளையைக் காணவில்லையெண்டு அத்தை எவ்வளவு பயந்துட்டேன் பார்த்தியா எழும்படி என்ர செல்லம் எழும்பி அத்தையோட கதை அப்பு "ஒரு பொம்மை உடைஞ்சதுக்குப் பிள்ளைய மனம் நோகிற மாதிரிப் பேசினால் பிள்ளை அழும் தானே" அத்தை வீடு அத்தை வீடு என்று அவன்தான் ஆசையில ஓடி ஓடி வாறவன்.

அவன்ர அருமை யாருக்கு விளங்கும் கோபத்தில் படபடத்தாள் லதா. ஐயோ அப்படி இல்ல. அந்தப் பொம்மையில உன்ர அண்ணனுக்கு சரியான விருப்பம். அது உடைஞ்சத அவர் தாங்கமாட்டார். அந்தப் படபடப்பில் தான் ஏதோ சொல்லிப் போட்டன்.

அவன் இஞ்ச எங்கட வீட்டில எத்தின சாமான உடைக்கிறான். பிள்ளைகள் எண்டா அப்பிடித்தான். லதா என்னைப் புரிந்து கொள்ளத் தயாரில்லை. பெருமூச்சோடு தலையைத் தடவி விட்டு மௌனமாய் வெளியேறினேன். என் மனம் உன் வரவை எதிர்பார்த்தது. உனக்குத்தான் உனக்கு மட்டும் தான் என்னைப் புரியும்.

நீ வந்தாய். தேநீர் தந்து நீ இளைப்பாறிய பின் மெதுவாக விசயத்தைத் தொடங்கினேன் அப்போதும் அந்த இழப்பு உன்னைப் பாதிக்கப் போகும் ஆழத்தை எண்ணி என் மனசு கலங்கிக் கொண்டுதான் தானிருந்தது.

"எங்கட கிளாஸ் பேபியெல்லோ அப்பா இண்டைக்கு உடைஞ்சு போச்சு

ஓம் தெரியும் ஜதீஷ் வந்து விளையாட எடுத்துப் போட்டு உடைச்சுப் போட்டான். எல்லாம் லதா போனில் சொன்னவள். ஓ அப்படியா உன் குரலிலிருந்த பதட்டமும் கோபமும் எனக்குப் புரிந்தது. கண்ணாடிச் சாமான்னெண்டால் உடையத்தான் செய்யும், அதுக்காக ஒரு குழந்தையின்ர மனச நோக வைக்கிறதா?

"இல்லையப்பா நான் சொல்லுறதக் கொஞ்சம் "

வேண்டாம் ஒண்டும் எனக்குச் சொல்ல வேண்டாம். குழந்தைகள்தான் எனக்குப் பெரிது. அதுகளின்ர அருமை உனக்கு விளங்காது

நீ ஒரு... தானே?


உனக்கெங்க குழந்தையின்ர அருமை விளங்கப் போகுது? பூமி பிளந்து என்னை விழுங்கியதாய், நெருப்பு மழையாகி என் மேல் பொழிந்ததாய் நான் மௌனமானேன்.

என்னிடம் வார்த்தைகள் எதுவும் இருக்கவில்லை நான் உறைந்து போனேன். எவ்வளவு நேரம் நாமிருவரும் மௌனமாய் இருந்தோமோ ஞாபகம் இல்லை. உன்னைச் சாப்பிட அழைத்தேன் பசி இல்லை என்று சொன்னாய். வெறும் வயிற்றோடு படுக்க வேண்டாம் என்று கொடுத்த பாலும் பாத்திரத்தோடு அப்படியே இருந்தது.

இருவரும் கவலை தின்னக்கிடந்தோம். எவ்வளவு நேரம் நான் அழுதிருப்பேனோ தெரியவில்லை. நள்ளிரவில் விழிப்புத் தோன்ற என்னிடம் வந்தாய். கோபத்தில் நோகப் பண்ணிவிட்டதற்காக மன்னிப்புக் கோரினாய்.

இதமாய் தயவாய் கெஞ்சினாய் கொஞ்சினாய விடிகாலைப் பொழுதில் உறங்கினோம். விடிந்தது என் வழமையான காலை பணிகளில் இயங்கினேன். ஏதும் நடவாதது போல் சகஜமாய் பேசினாய் பதிலுக்கு நானும் ஏதோ பேசினேன். குளித்தாய் சாப்பிட்டாய் விடை கொண்டாய் புறப்பட்டாய்.

இதோ மாலையாகிறது. நீ வருவாய் கணவனும் மனைவியுமாய் நம் வாழ்வு தொடரும். இருளும் விடியும் பகல் தொடரும் மீண்டும் இருளும் பின் விடியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிப்படத்திற்குக் கருத்திடு

**இந்த வரிப்படத்தை என்னவென்று கண்டறிந்து அது தொடர்பில் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்**

### போட்டி 04



### விதிமுறைகள்

01.ஆக்கம் 100 சொற்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

02.ஆக்கத்தினை 20.08.2021ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.


03.வெற்றிபெறும் ஆக்கம் அடுத்த இதழில் பிரசுரமாகும்.

04.வெற்றிபெற்ற ஆக்கத்திற்கு 1000ரூபா பரிசு வழங்கப்படும்.

05.பரிசுகள் 30.09.2021ஆம் திகதிக்கு முன் வழங்கப்படும்.

06.editor@siriththiran.com என்ற மின்னஞ்ச லுக்கு அனுப்பவும். அல்லது "65, வேலப்பர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்." என்ற முகவரிக்குத் தபாலில் அனுப்பவும்.

### வரிப்படத்திற்குக் கருத்திடு போட்டி 03 இன் வெற்றியாளர்



கன்னியா குமரியில் முக்கடலும் சங்கமிக்கும் இடத்தில் அமைந் துள்ள திருவள்ளுவர் சிலை சிறப்புடையது. அப்போதைய முதலமைச்சர் கருணாநிதியால் 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி 133அடி கொண்ட இச்சிலை திறந்து வைக்கப்பட்டது.

திருக்குறள் அதிகாரங்களின் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு கட்ட அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

கடலின் நடுவிலுள்ள இச்சிலையையும், விவேகானந்தர் நினைவு மண்டபத்தையும், கடலிலிருந்தெழும் சூரிய உதயத்தினையும் காண ஏராளமான சுற்றுலாப் பயணிகள் திரிவேணி சங்கமத்தில் குவிவது வழக்கம்.

2020ஆம் ஆண்டு திருவள்ளுவர் சிலையையும் விவேகானந்தர் பாறையையும் இணைத்து பாலம் அமைக்கும் தமிழக முதல்வரின் திட்டத்திற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஏனெனில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை இரசாயனக் கலவை பூச வேண்டுமாம்.

லேசர் கதிர் பாய்ச்சும் முயற்சிகளும் இடம்பெற்றன.இதன் பாதுகாப்புக்கு காகிதக்கூழ் ஒட்டப்பட்டு உப்புநீர் உறிஞ்சி அகற்றப்படும்.

பிரதமர் மோடி ஹெலிகாப்டரிலிருந்து இப்பிரதேசங்களை எடுத்த காணொளி இணையத்தளங்களில் அதிகமானோரால் இரசிக்கப்பட்டு வருகின்றது.

**சண்முகநாதன் பாலசுதன்,**
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.



**மனைவி :** அதோ அந்தக் கோவிலடியில் துண்டு விரித்து பிச்சை எடுக்கும் நபரை தெரியுமா?

**பரமு :** அவர் தான் "குறைந்த நாட்களில் குபேரனாவது எப்படி?" என்ற புத்தகத்தை எழுதியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதிச் சிரிப்பு

**ஒருவர்:** ஒரு சந்தோஷமான செய்தி... என் மகன் அயல் வீட்டுப் பெண்ணிற்குக் காதல் கடிதம் எழுதுகிறான்.

**மற்றவர்:** என்ன!... இது சந்தோஷமான செய்தியா?


**ஒருவர்:** இல்லாம... சீமையில வெள்ளைக் காரியைக் கல்யாணம் பண்ணாமல் ஊரில் வந்து அவளைக் கல்யாணம் பண்ணுவானல்லவா!





**பணக்கார நண்பன்:** வெய்யிலில் போகாதே... இந்தக் குடையைக் கொண்டுபோ.

**ஏழை நண்பன்:** குடையில் போனால் வருத்தம் வந்தாலும் வரும்...! பழக்கமில்லையே...




**முதல் சிறுவன்:** எனக்குச் சண்டைப் படமென்றால் பிடிக்கும்.

**இரண்டாம் சிறுவன்:** உனக்கு எப்படி இந்தப் பற்று ஏற்பட்டது.

**முதல் சிறுவன்:** அப்பா அம்மா சண்டைப் பிடிப்பதைத் தினமும் பார்த்து அதில் ஒருபற்று ஏற்பட்டுவிட்டது.

**நண்பன்:** இன்று ஏன் அலுவலகம் போகவில்லை!



**மற்றவர்:** கார் டயர் தேயாமல் இருப்பதற்காக இப்படி அடிக்கடி நான் லீவு போடுவதுண்டு.

**நோயாளி :** இந்தத் துண்டில் என்ன மருந்து எல்லாம் எழுதியிருக்கிறீங்க?



**டாக்டர் :** என் எழுத்து எனக்கு விளங்காது... மருந்து கலப்பவருக்குத் தான் விளங்கும்.

## சிரியகடி

**வழிப்போக்கன் :** ஐயா! இந்த முறை உங்கள் புதிய நிர்வாகத்தை தையல் தொழிலாளிகள் சங்கத்திடம் கையளித்தீர்களாம். புரிய வில்லை


**பெரியவர் :** என்ன தம்பி செய்யுறது எங்கள் பழைய நிர்வாகம் கிழிஞ்சு கந்தலாய் கிடக்குது ஒருமாதிரி தைச்சு எடுக்கலாம் என்ற நம்பிக்கைதான்.

**வழிப்போக்கன் :** அது சரியான தீர்மானம்

-பாலா நோர்வே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு
# மகாராஜாவின் மறைவு



இன்றைய தொழில் முயற்சியாளர்களில் பல்வேறு வகையானவர்கள் எம்மிடையே பரந்தும் விரிந்தும் காணப்படுகின்றார்கள் ஆனால் எமக்கெல்லாம் முன்னோடியாக கலை, வர்த்தகம், சினிமா, விளையாட்டு வர்த்தகம் என பல்வேறுபட்ட துறைகளில் மிகப்பெரும் ஜாம்பவானாக திகழ்ந்தவர் கம்பிரல் மகாராஜா நிறுவனத்தின் தலைவர் ஆர்.ராஜமகேந்திரன்.

தனது விடாமுயற்சி, கடின உழைப்பு, எந்தத் தோல்வியிலும் துவண்டு போகாது மீண்டெழுகின்ற ஆற்றல்கொண்ட அற்புதமான மனிதர். நீண்ட காலம் இவர் வர்த்தகத்துறையில் கோலோச்சியதால் தேசிய ரீதியதில் மாத்திரமல்லாது சர்வதேச ரீதியிலும் அறியப்பட்ட ஒருவராகத் திகழ்ந்தார். தனது ஆளுமையால் அவர் ஒரு மகாராஜாவாகத் திகழ்ந்தார்.

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாக் கொண்ட ராஜமகேந்திரன் அவர்கள் எப்பொழுதும்

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்னும் வள்ளுவரின் குறளுக்கு இணங்க ஒரு பொறுப்பை யாரிடம் ஒப்படைக்க வேண்டும்? யார் அந்த செயலை திறம்பட செய்வார்கள் என்ற நுணுக்கங்கள் பலவற்றை மிகத் தெளிவாக தெரிந்து கொண்டவர்.

தமிழர்கள் மத்தியில் சமகாலத்தில்

மேலோன் என்றும் வாழ்வோன்

கப்பிற்றல் மகாராஜா நிறுவனத்தின் தலைவர்

# ராஜ்.ராஜமகேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் பணத்திற்கு அதிக வருமானம்பெற சுலபமானவழி....

மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதிநிறுவனம்

இலங்கையிலே அதிகவட்டியாக 24% வீதம் வழங்குகிறது

18% ...

20% ...

24% ...

மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதி நிறுவனம்

1980ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மகாராஜா முதலீட்டு நிறுவனத்தால் சிரித்திரனுக்கு வழங்கப்பட்டு பிரசுரமான விளம்பரம்.

வர்த்தகத்துறையில் கொடிகட்டிப் பறந்தவர்களில் போற்றுதற்குரியவர். கப்பிற்றல் மகாராஜா ஊடக குழுமத்தின் தலைவராகவும் தமிழ் மக்களின் நம்பிக்கை நாயகனாக வலம் வந்தவர்.

1983ஆம் ஆண்டு நடைபெற்ற யூலைக் கலவரத்தில் அவரது சொத்துக்கள் பல தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. அதன் பின்னரும் சோர்ந்து போகாது மீண்டும் தனது வர்த்தக சாம்ராஜ்யத்தைக் கட்டியெழுப்பினார். அத்துடன் சேர்ந்து தமிழ், சிங்கள், முஸ்லிம் என பல இன, மொழிகளைச் சேர்ந்த பல்வேறு பட்டவர்களைக் கொண்டு ஊடக சாம்ராஜ்யத்தைக் கட்டியெழுப்பினார்.

சக்தி, சிரச, எம்.ரி.வி, நியூஸ்பெஸ்ட் ஆகிய ஊடக நிறுவனங்கள் இவரின் ஆளுமையால் உருவாக்கப்பட்டவை. அவை இன்றும் ஊடகத்துறையில் புதியதொரு பரிமானத்தில் "தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள்" எனும் மகுட வாசகத்துடன் இயங்கி வருவதைக் காணலாம்.

முன்னைய ஜனாதிபதி பிரேமதாசவிற்கும் அவருக்கும் நீண்ட காலமாக மிக நெருக்கமான உறவு நிலை காணப்பட்ட போதிலும் அவர் எந்தவொரு இடத்திலும் தற்பெருமை யினை விரும்பாத சாதாரண மனிதராக வலம் வந்தார்.

கலைத்துறையிலே மிகுந்த ஆர்வம் கொண்டவராக விளங்கிய ஆர்.ராஜமகேந்திரன் அவர்கள் தென்னிந்திய திரைப்பட நடிகர் சூப்பர் ஸ்ரார் ரஜனிக்காந் நடித்த "தீ" திரைப்படத்தில் இலங்கை கலைஞர்களும் நடிப்பதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்தார்.

அது மாத்திரமன்றி ஆசியாவின் மிகப்பெரிய ஒலிப்பதிவுக் கூடமான ஸ்ரெயின் கலையகத்தினை உருவாக்கிக் கலைஞர்கள் மத்தியிலும் ஊடகத்துறை மத்தியிலும் பலத்த வரவேற்பைப் பெற்றார்.

**ஆசியாவின் மிகப்பெரிய ஒலிப்பதிவுக் கூடமான ஸ்ரெயின் கலையகத்தினை உருவாக்கி கலைஞர்கள் மத்தியிலும் ஊடகத்துறை மத்தியிலும் பலத்த வரவேற்பைப் பெற்றார்.**

இலங்கையில் பல்வேறு வகையான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் திரைப்படங்கள் சீரியல் போன்றவற்றை இங்குள்ள ரசிகர்கள் பார்பதற்காக இந்தியத் தொலைக் காட்சி ஊடகமான சண் தொலைக் காட்சியுடன் இணைந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அத்தொலைக்காட்சியில் ஒலிபரப்பாகும் திரைப் படங்கள், நாடகங்களை இலங்கையிலுள்ளவர்களும் பார்க்கக் கூடிய வகையிலே சக்தித் தொலைக் காட்சியில் ஒலிபரப்பத் தொடங்கினார்.

அவை இன்றும் சக்தித் தொலைக்காட்சியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருப்பதைக் காணலாம். அதே போல் நியூஸ் பெஸ்டில் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றிய லெஸ்லியா என்பவரை பிக் பெக்ஸ் பிரபல்யமாக மாற்றி சினிமாத்துறையில் மிளிர வைப்பதற்கும் இவரது பங்களிப்பு காரணமாகவிருந்தது.

யாழ்ப்பாணத்தில் பிறந்த ஆர்.ராஜமகேந்திரன், இலங்கையின் அரசியல், வர்த்தகம், விளையாட்டு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தனது செல்வாக்கை செலுத்தியிருந்தார்.


அந்த வகையில், இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புகளை பேணியது மாத்திரமின்றி, தமிழக சினிமாவுடன் இவரது தொடர்பு இறுதி வரை காணப்பட்டது.

இதேவேளை, ஆர்.ராஜமகேந்திரனின் மறைவுக்கு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தனது இரங்கலை ட்விட்டரில் வெளியிட்டிருந்தது. இலங்கையின் ஊடக ஜாம்பவான், கெப்பிட்டல் மஹாராஜா குழுமத்தலைவர், ஆர். ராஜமகேந்திரன் கடந்த 25ஆம் திகதி காலமானார்.

கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் கடந்த சில வார காலமாக சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக, அவரது நிறுவனத்துக்கு சொந்தமான 'நியூஸ் பெஸ்ட்' ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. இவரது இழப்பென்பது எவராலும் ஈடுசெய்ய முடியாததும் தாங்கிக் கொள்ள முடியாததுமான பேரிழப்பாகும். தான் வாழும் காலத்தில் பல தொழில் வல்லுநர்களையும் தொழில் முயற்சியாளர்களையும் வளர்த்துவிட்ட ஓர் முன்னோடியான மனிதர் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவைத் துணுக்குப் போட்டி 06




## இந்தப் படத்துக்கு ஒரு நகைச்சுவைத் துணுக்கு எழுதவும்

**விதிமுறைகள்:**

1. துணுக்கு பத்துச் சொற்களுக்குள் இருத்தல் வேண்டும்.
2. உங்கள் ஆக்கத்தினை வருகிற **20.08.2021** முன் அனுப்பி வைக்க வேண்டும்.
3. தெரிவு செய்யப்பட்ட மூன்று துணுக்குகள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.
4. அதில் வெற்றிபெறும் ஒரு துணுக்கு வரும் புரட்டாதி இதழில் வெளியாகும்.
5. வெற்றி பெற்றவருக்குப் பரிசாக **1000**ரூபாய் **30.10.2021** இற்குள் வழங்கப்படும்.
6. **editor@Siriththiran.com** எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாக அல்லது **"சிரித்திரன், 65, வேலப்பர் ஒழுங்கை (ஸ்ரான்லி கல்லூரி முன்வீதி), அரியாலை, யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்குத் தபால் மூலமாக உங்கள் ஆக்கங்களை அனுப்பவும்.


---

### நகைச்சுவைத் துணுக்குப் போட்டி 04 இன் வெற்றியாளர்



**மூச்சைக் காக்கும் முகக்கவசம்**
**மரத்தைக் காத்தால்**
**உயிர்க்கவசம்**

**வைஷாலி புனிதநாதன்,**
**மீசாலை.**



### இறுதித் தெரிவுகள் – 05

கட்டியும் நிமிராத வால்,
தட்டியும் நிமிராத நம் மனிதநேயம்.
ராணி சிவா, லண்டன், (யாழ் திருநெல்வேலி)

'நிமிரா வாலை நீட்டிட நினைந்தாய்
நேரம் கடந்த போது வாழ்வினைத்
தொலைத்தனை மனிதா'
பரிபூரணானந்தசர்மா சசிவர்ணன்
இல. 49, 'ஸ்வஸ்தி பவன்'
ஞானப்பிரகாசர் வீதி, உடுவில், சுன்னாகம்.

மாசுள்ள மனமோ மாந்தருக்கு...
நாய்வாலை நிமிர்த்தவும்
நயவஞ்சக வழி...!
செல்வி. வைஷாலி புனிதநாதன்
105/1. பங்களா வீதி, சாவகச்சேரி வடக்கு, மீசாலை.



**"கூப்பிடு தொலைவில் ஒரு பொலிஸ்காரரும், பார்வைக்கு எட்டிய தொலைவில் ஒரு சிறைச்சாலையும் இருப்பதால் தான், மனிதன் சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடக்கிறான்"**

**– பெர்னாட்ஷா**

**"சிலர் பணத்தை வெறுப்பதாகக் கூறுவர் ஆனால் அவர்கள் வெறுப்பது பிறரிடமுள்ள பணத்தையே"**

**– கோல்ட்டன்**

---

**நகைச்சுவைத் துணுக்குப் போட்டி – 06**

பெயர்: ..........................................................

உங்கள் நகைச்சுவைத் துணுக்கு


முகவரி :..........................................................

..........................................................

தொலைபேசி இலக்கம்:..........................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளும் கணவாயும்...



✍ வேதநாயகம் தபேந்திரன்

சுவையான ஒரு கணவாய்க் கதை யொன்றைச் சொல்லலாமென வருகிறேன். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் எனது முதற் பட்டத்திற் காகப் படித்த காலம் 1990ஆம் ஆண்டு முதல் 94 வரை யாகும்.

ஒரு நாள் நண்பன் சிவா சொன்னான் "மச்சான், கள்ளில் கணவாய் அவித்து தாளிச்சுச் சாப்பிட்டால் அந்த மாதிரி இருக்குமாம். கள்ளைக் காய்ச்சும் போது அதில் ஒரு வகை மதுவம் உண்டாகும். அதில் கணவாயை அவித்துப் பின் வதக்கிச்சாப் பிட்டால் தனியான ஒரு வகைச் சுவை யைக் கொடுக்கும். எனக்கு இன்னார் சொன்னது" என்றான்.

சரி சாப்பிடுவோம். எப்ப செய்வம். என நண்பர்கள் குழு கேட்டது. "கணவாய் எப்ப மலிவோ அண்டைக்கு இதைச் செய்வம்." வெள்ளிக்கிழமை நாளில் தான் கணவாய் மலிவாக இருக்கும். மற்ற நாள்களில் விலை அதிகம் என்றேன். பல்கலைக்கழகச் சோசலிசத்துக்கு வெள் ளியென்ன? செவ்வாய் என்ன? எனத் தெரியாத பருவம்.

அப்போது கடல்வலயத் தடைச் சட்டம் இருந்தது. கடலில் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் போக முடியாது. சரி, வெள்ளிக்கிழமையன்று செய்வம்.

பாசையூர் மீன் மாக்கெற் கிட்ட அங்க போய் நல்ல கணவாயாகப் பார்த்து வாங்கி வா. நான் ஆனைக் கோட்டைக்குப் போய்க் குயிலப்பா வீட்டில் கள்ளு வாங்கி வாறன். என்ர வீட்டில சமைப்பம்"

"தபே! உனக்குத்தான் பாசையூர் மீன்சந்தை கிட்ட. அங்க போய் நல்ல கணவாயாகப் பார்த்து வாங்கி வா. நான் ஆனைக்கோட்டைக்குப் போய்க் குயிலப்பா வீட்டில் கள்ளு வாங்கிவாறன். என்ர வீட்டில சமைப்பம்" என்று சிவா சொல்ல நண்பர் குழு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. சிவா தற்போது அவுஸ்திரேலியாவில் இருக்கிறான். ஏனைய நண்பர்களும் ஆளுக்கு ஒரு திசையிலும் நாட்டிலுமாகப் போய் விட்டார்கள்.

கள்ளில் கணவாய் காய்ச்சும் படலத்திற்குரிய வெள்ளிக்கிழமை வந்தது. சிவா கள்ளு வாங்கி வந்தான். நான் கணவாய் வாங்கப் போனேன்.

கந்தர்மடத்திலுள்ள சிவா வீட்டு பூவரசு மர நிழலில் பெரிய தாச்சி வைத்து அதில் இரண்டு போத்தல் கள்ளை விட்டுக் கள்ளைக் காய்ச்சத் தொடங்கினோம்.

சிவாவிற்கு அப்பா இல்லை. தாயார் எட்டிப் பார்த்து விட்டு "வெள்ளிக்கிழமை நாளும் அதுவுமாய் இதென்ன கோதாரி வேலையடா" எனச் சிவாவைப் பார்த்துப் பேசினார்.

"எணை நீ சும்மா இரணை. பெடியளோட ஒரு முஸ்பாத்திக்குத்தானே இது." எனச் சிவா தாயாரைப் பார்த்துச் சொன்னான். அவவும் புறுபுறுத்தபடி விலகிச் சென்றார்.



கள்ளு காய்ச்சப்பட்டு உச்சமாகக் கொதிக்கும் நிலை வந்தது. தாச்சியிலுள்ள கள்ளின் அளவும் மெல்ல மெல்ல வற்றத்தொடங்கியது. சிவா பக்குவமாக வெட்டப்பட்டுத் துப்பரவு செய்யப்பட்ட கணவாய்த் துண்டுகளை அதில் எடுத்துப் போட்டான். அகப்பையால் பிரட்டிப் பிரட்டி அவிய விட்டான். கள்ளு வற்றும் வரையில் கணவாய்த் துண்டுகளை அவித்த பின் எடுத்து ஒரு தனிப் பாத்திரத்தில் போட்டான்.

அவன் சமையலில் ஒரு எக்ஸ்பேட்.

பிறகு இன்னொரு தாச்சி அடுப்பில் ஏறியது. அதில் அளவாகத் தேங்காய் எண்ணை விட்டுக் கொதிக்க வைத்தான். வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய்த் துண்டுகளைப் போட்டு வதக்கினான். தேவையான அளவு உப்புப் போட்டு நற்சீரகத் தூள், மிளகுத் தூள், இஞ்சித் தூள், இடித்த உள்ளி போட்டு அளவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதக்கிய பின்னர் அவித்த கணவாய்த் துண்டுகளை எடுத்து அதில் போட்டான். கணவாய்த் துண்டுகள் நன்கு முறுகி வரும் போது அளவாக மிளகாய்த் தூளைப் போட்டு அகப்பையால் பிரட்டினான்.

கணவாய்ப் பிரட்டல் றெடியானது. சிவா ஏற்கனவே சம்பா அரிசியில் சோறு போட்டிருந்தான். சுடச் சுடச் சம்பா அரிசிச் சோற்றில் கணவாய்ப் பிரட்டலைப் போட்டுச் சாப்பிடத் தொடங்கினோம்.

உண்மையில் அது தேவாமிர்தமாகத் தான் இருந்தது.

இப்போது நினைத்தாலும் வாய் ஊறு கிறது. என்ன செய்வது வெள்ளிக்கிழமை மலிவு பார்த்து வாங்க முடியாத குடும்பஸ்தராகி விட்டேன். பல்கலைக்கழகச் சோசலிச வாழ்க்கையையும் வாழ முடியாது.

கணவாய் சமைக்கும் போது அதன் மையை அளவாக விட்டுச் சமைப்பது ஒரு வகைக் கலை. கணவாயை வெட்டும் போது மைக் கூட்டைச் சேதப்படாமல் எடுக்க வேண்டும். சட்டியில் கணவாய் மையின் துளி ஒன்றை அளவாக விட வேண்டும். அதற்கேற்ற அளவாக மிளகாய்த் தூளைப்

சட்டியில் கணவாய் மையின் துளி ஒன்றை அளவாக விட வேண்டும். அதற்கேற்ற அளவாக மிளகாய்த் தூளைப் போட வேண்டும். கறுப்புக் கலரில் கணவாய்க் கறி வரும். சம்பா அரிசிச் சோற்றுடன் சாப்பிட்டால்...

போட வேண்டும். கறுப்புக் கலரில் கணவாய்க் கறி வரும். சம்பா அரிசிச் சோற்றுடன் சாப்பிட்டால் அது ஒருவகை ருசிதான்.

திருகோணமலையில் வாழ்ந்த காலத்தில் அங்கிருந்த கணவாய்க் கறி சாப்பிட்டேன். ஐஸ்கிறீம் கோண் போல அந்தக் கணவாய் இருக்கும். யாழ்ப்பாணத்தில் பெரிய கணவாயைப் பார்த்த நாம் அதற்குக் குஞ்சுக் கணவாய் எனப் பெயரிட்டோம். அந்தக் குஞ்சுக் கணவாய்க் கறி ஒருவகை ருசி. அதனைப் பொரித்துச் சாப்பிட்டால் அதுவும் ஒருவகை ருசி தான்.

யாழ்ப்பாணத்தில் ஊசிக் கணவாய், ஓட்டுக் கணவாய் எனக் கணவாயில் இருவகை உண்டு. கணவாயின் வெள்ளை நிறத்திலான தசையில் கறுப்புப் புள்ளிகள் விழுவதை வைத்துக் கணவாய் கடலில் பிடிபட்டு எவ்வளவு நேரமெனக் கூறுவார்கள். கணவாய் நாறிய பின்பு சமைத்தால் அதன் சுவை கூடுமென்று கூறுவோருமுள்ளனர்.

ஊசிக் கணவாயைச் சமைக்கும் போது கறிமுருங்கை இலை, எரிந்த சிரட்டையின் துண்டு ஆகியவற்றை சமையலில் சேர்க்கும் ஒரு வழக்கமும் உள்ளது. வாய்வுத் தொல்லை வராது என்பார்கள்.

ஓட்டுக் கணவாய் அதிகம் சாப்பிட்டால் வயிற்றுக்குள் குத்துமாம் என்பார்கள். அதனால் நானோ அப்பா தம்பிமாரோ அதனை வாங்குவதில்லை.

ஓட்டுக் கணவாயில் வரும் ஓட்டை எடுத்துத் தங்க நகை செய்வோர் டிசைன்களை உருவாக்குவார்கள். அதில் தங்கத்தைக் காய்ச்சி ஊற்றி நகையின் வடிவங்களை உருவாக்குவார்கள்.

சிங்கள மக்கள் வாழும் தெருக்களில் மீன் பெட்டி வியாபாரி கணவா கணவா எனச் சொல்லிக் கொண்டு போனால் சிரிப்பார்கள். காரணம் சிங்களத்தில் கணவா என்றால் சாப்பிடுகிறேன் என்ற கருத்து வரும்.

போர் முடிந்ததும் யாழ்ப்பாணத்தின் கணவாய்களை வாங்க டிபிறீசர் (குளிரூட்டி) உள்ள தென் பகுதி வாகனங்கள் வருகின்றன. வாங்குகின்றன. விளைவு நடுத்தரக் குடும்பங்களின், வறிய குடும்பங்களின் கைக்கெட்டாத விலைக் குக் கணவாய் சென்று விட்டது.

நாமும் "கணவா, கணவா என அதாவது சாப்பிடுகிறேன், சாப்பிடுகிறேன்" எனச் சொல்லிக் கனவு கண்டு கொண்டு இருக்க வேண்டியது தான். ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 06

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | | | | ■ |
| | ■ | 3 | 4 | | | | ■ | 5 |
| | ■ | | ■ | ■ | 6 | | | |
| | 7 | | | | | 8 | ■ | |
| | | | 9 | | | | | |
| ■ | | | | ■ | 10 | ■ | 12 | |
| ■ | | | | ■ | | ■ | | ■ |
| 11 | ■ | ■ | 14 | ■ | | ■ | | ■ |
| | 13 | | | 15 | | | | ■ |

## இடமிருந்து வலம்

01. உலகை ஆட்டிப்படைக்கும் வைரஸ்
02. இதற்கும் தட்டுப்பாடு வரும்
04. இது போல் தான் வாழ்க்கை அமையும் என்று பெரியோர் கூறுவர்
06. மகிழ்ச்சி
07. இட்டார் இடாதார் இடப்படும் இடம்
09. எப்பொழுதும் நம்மை சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் சஞ்சிகை
12. வீரனை இப்படியும் அழைப்பர்
13. மானின் ஒத்த சொல்
15. தமயந்தியின் காதலுக்கு தூதானது

## மேலிருந்து கீழ்

01. விஜய் அன்ரனி நடித்த படம்
02. ..... என்றால் பேயும் இரங்கும்
03. சீனிக்கும் இந்த நிலை வருமாம் சில வர்த்தகர்கள் கூறுகிறார்கள்
05. குறளுக்கு வள்ளுவன் போல் கவிதைக்கு...
06. கண்ணைக் காப்பது போல் எதனாலும் காக்க முடியாது( இரண்டு எழுத்துச் சொல்)
07. இன்பத்திற்கு எதிரானது
08. பெண்களின் முகத்தை இதற்கும் ஒப்பிடுவார்கள்
09. கல்லுக்குள் இருக்கும் கடவுளை கண்ணுக்கு காண்பிப்பவன்
10. இராமனின் பாதுகைகளை வைத்து ஆட்சிபுரிந்தவன்.
11. சிலர் குடும்பத்தின்......... காரணமாக தவறான முடிவெடுப்பதுமுண்டு.
12. அடவி
14. இது இப்போது ஏறிக்கொண்டோ போகிறது இறங்கிய பாடில்லை.(தலை கீழ்)

## குறுக்கெழுத்துப் போட்டி - 5 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.அகராதி 3.கொல்லிமலை 6. பல்லக்கு 7.மழலை 8.மூக்கு 9.டச்சு 10.சோழன் 11.விண்கலம் 13.புகழேந்தி 14.பகடை 17.பெண்சாதி 18.பேரிளம்பெண்

**மேலிருந்து கீழ்**

1.அடிப்படை 2.திண்டுக்கல் 3.கொமபேறிமூக்கன் 4.மனு 5.ஓலைச்சுவடி 7.மகுடம் 12.சந்ததி 15. கனம் 16.பாரி

# சுடொக்கு விளையாட்டு 05

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | 3 | 5 | | 1 |
| | | | | | 1 | | | 6 |
| | | | 4 | 2 | | 3 | | 7 |
| | | 3 | 1 | | | | 8 | |
| | 4 | 7 | | | | 1 | 5 | |
| | 1 | | | | 9 | 2 | | |
| 7 | | 1 | | 8 | 4 | | | |
| 5 | | | 7 | | | | | |
| 3 | | 4 | 9 | | | | | 2 |

- 9X9 கட்டங்கள் இணைந்து உருவாகிய இந்தச் சுடோக்கு விளையாட்டில் சில எண்கள் மட்டும் தரப்பட்டிருக்கும். மிகுதிக் கட்டங்களை 1 - 9 வரை யான எண்களைக் கொண்டு நிரப்புதலே உங்களுக் குத் தரப்பட்ட சவால். நிரையிலோ நிரலிலோ ஒரு எண் ஒரு தடவைக்கு மேல் இடம்பெறக் கூடாது.
- சுடோக்குப் புதிரிலுள்ள இலக்கங்களை உங்களால் மாற்ற முடியாது.
- ஒரு சுடோக்குப் புதிருக்கு ஒரு விடையே உண்டு.

**சுடொக்கு 4 இன் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 5 | 8 | 6 | 2 | 4 | 3 | 1 |
| 3 | 8 | 2 | 4 | 9 | 1 | 7 | 5 | 6 |
| 6 | 1 | 4 | 3 | 5 | 7 | 9 | 2 | 8 |
| 2 | 9 | 7 | 5 | 1 | 6 | 3 | 8 | 4 |
| 1 | 4 | 6 | 7 | 3 | 8 | 5 | 9 | 2 |
| 5 | 3 | 8 | 9 | 2 | 4 | 1 | 6 | 7 |
| 4 | 5 | 1 | 6 | 8 | 9 | 2 | 7 | 3 |
| 8 | 2 | 9 | 1 | 7 | 3 | 6 | 4 | 5 |
| 7 | 6 | 3 | 2 | 4 | 5 | 8 | 1 | 9 |

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

Pulamai Media
PRODUCTIONS

CONTACT US

+94 741 238 937

Video Editing | 2D, 3D Animations | Graphic Designing

Wedding Videos | White Board Animation | Advertisements

Content Writing | Social Media Managements

Vocal artists | 3D Architechural Visualization

Colour Correction & Grading | VFX

Mail: info@pulamaimedia.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எண்ணங்களின் பயணங்கள்...

ராஜா நர்மி, மலையகம்

## ஆதாம் மலை

ஒரு சிறு பூவை
நீ அசைத்தால்
ஒரு நட்சத்திரம்
அணைந்து போகலாம்

என்றான் பிரான்சிஸ் தொம்ஸன். ஒரு நாளில் ஆயிரக் கணக்கில் சிவனொளிபாதமலையை நோக்கி வருகின்ற பட்டாம்பூச்சிகளின் சிறு அசைவு, அந்த இரவு முழுவதும் பரவி இருந்த நட்சத்திரங்களை வீழ்த்திவிடுமோ என்றிருந்தது.

மலையை நோக்கி நடப்பது ஆதித்தாயின் குடிலை நோக்கிய பயணம் போல மனதிற்கு அருகில் மிக நெருக்கமாக இருக்கிறது எப்போதும். நீண்ட பயணங்களை இரவிலும், அதிகாலையிலும் கடந்து முடிப்பதையே நான் விரும்புகிறேன். இந்தப் பயணம் கூட அப்படித்தான். இரவு முழுவதும் நீண்டுகொண்டே போய்க்கொண்டிருந்த இரவுப்பயணம் அது.

பட்டாம்பூச்சிகள் போல வாழத்தொடங்கிவிட்டால் அல்லது வாழ்வை பார்க்கத்தொடங்கிவிட்டால் இந்த வாழ்வு எப்படியெல்லாம் நேசிக்கத்தக்கதாக மாறிவிடும் என்று நினைத்துப்பார்க்கிறேன். வாழ்வின் மீதான பார்வை பெரும் சுமையாக மாறிவிடுகிற நொடிகளில் எல்லாம், பறவைகளையும், பட்டாம்பூச்சிகளையும் பார்ப்பேன். இரவீந்ரநாத் தாகூர் சொல்வதைப்போல

*The butterfly counts not*
*Months but moments and*
*Has time enough*

நாங்கள் ஏன் எங்களுடைய மகிழ்ச்சிகளை எண்ணத்தொடங்குவது இல்லை...? நான் எண்ணத் தொடங்கிவிட்டேன். இனி நீங்களும் எண்ணவேண்டும் என்று விரும்புகின்றேன். என் வாழ்வில் இயற்கைக்கு அருகில் மிக மிக மகிழ்ச்சியாக இருக்க வாய்ப்பளித்த ஆதாம் மலையைப் பற்றி சொல்லப்போகின்றேன்.



நீண்டுகொண்டே போகின்ற மலைத் தொடர் ஒன்றினை நான் முதன் முதல் பார்க்கின்றேன். மனதும், உடலும் பின்னோக்கித்தள்ள நண்பர்களின் கைகளைக் கோர்த்தப்படி அந்த மலையேற்றம் இருந்தது. நிர்மலமான இரவு வானில் பலகோடி நட்சத்திரங்கள் மின்னுகின்ற விசாலமான அந்த நட்சத்திர அடவியின் கீழ் வரிசையாக அந்த நட்சத்திரங்கள் சிதறி விழுந்து பாதையமைத்ததை போன்று நீண்டு செல்லும் உச்சி மலையினை நோக்கி பல்லாயிரக் கணக்கான மக்களுடன் நாங்களும் பின்தொடர்ந்து கொண்டிருந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் கூட்டமாக ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தியப்படி போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால் பிரச்சனை என்னவென்றால் அம்மலையில் நாம் முன்னோக்கி நகர நகர ஒரு படி வளர்ந்துகொண்டு போவது போல எனக்கு தோன்றியது.

இலங்கையில் சப்பிரகமுவா, மத்திய மாகாணங்களுக்கு இடையில் கடல் மட்டத்தில் இருந்து 7,359 அடி உயரமான கூம்பு வடிவிலான மலையே சிவனொளிபாதமலை என்று அழைக்கப்படுகிற ஆதாம் மலையாகும். இயற்கையைக் கடந்து அங்கு மதம் முன்னிலைப்படுத்தக் காரணமாக இருப்பது அந்த சர்ச்சைக்குரிய 1.8 அளவான பாத அமைப்பே. அது இலங்கையில் உள்ள நான்கு மதத்தவர்களாலும் அவரவர்க்கு உரிமையுடையது என கொண்டாடக் காரண மாகியது.

இதையெல்லாம் பார்க்கும் போது இயற்கை என்கின்ற பெரிய பிரமாண்டத்தின் முன்கூட சிறுமைகளை செய்வதை மனிதன் நிறுத்துவதேயில்லை என தோன்றியது.

இயற்கையின் பிரமாண்டத்தை அப்படியே உள்வாங்க முடியாத குறைபாடு எப்போதும் அவனிடம் இருக்கின்றது. ஒப்புமையற்ற அந்த இயற்கையின் முன் சிறுமையான ஏதோவொன்றை மனமுவந்து செய்கின்றான் என்பது தான் எனக்கு விசித்திரமாக இருந்தது. இயற்கையை இயற்கையாகக் கொண்டாடித் தீர்க்க முடியாத ஏதோவொரு மனக்குறை அவனுக்குள் இருந்து கொண்டேயிருக்கிறது. அதனால் தான் உலக மனிதருக்கு எல்லாம் பொதுவான இயற்கைக்கு முன் ஏதோ சில கட்டிடங்களை கட்டி நிரூபிக்க முயற்சிக்கின்றான்.

> இல்லை நீங்கள் வாழ்வின் நொடியை கொண்டாடுகிற, இயற்கையை கொண்டாடுகிற மனிதர் எனில் இந்த ஆதாம் மலை உங்களை வசியப்படுத்திவிடும்.

எந்தவொரு இயற்கையின் இரம்மியத்திற்குள்ளும் இலங்கை முழுவதும் வலுக்கட்டாயமாக வந்தமர்ந்துகொள்கின்ற விகாரைகள், புத்தரின் பிரதிமைகள், அரசமரம், பாத அச்சுகள் ஏதோ செயற்கையின் அபத்த குறியீடாக எனக்கு தோன்றுகின்றது. மலை ஏற ஏற சிறிது சிறிதாக அதன் கீழேயுள்ள இந்திரக்கடவுளின் காடு எனப்படுகிற "சமன் அடவிய" இருள் சூழத்தொடங்கியது. மலையை நோக்கி உயரே செல்ல செல்ல குளிர் உடல் முழுவதும் பரவ ஆரம்பித்து விட்டது.

உடலை நடுங்கச்செய்கின்ற குளிர் அது. நீங்கள் முற்று முழுவதும் சமயவாதியென்றால் இங்கு உங்களுக்கு செய்ய நிறைய ஐதீகங்கள் இருக்கின்றன. கோயில், விகாரை, ஊசி மலை, அருவி, காணிக்கை என சில மதம் சார்ந்த நம்பிக்கைகள் இருக்கின்றன. இல்லை நீங்கள் வாழ்வின் நொடியைக் கொண்டாடுகிற, இயற்கையை கொண்டாடுகிற மனிதர் எனில் இந்த ஆதாம் மலை உங்களை வசியப்படுத்திவிடும். ஆதாம் மலையில் இருந்து ஊற்றெடுக்கின்ற மகாவலி கங்கை, களுகங்கை, களனி கங்கை, பச்சைபசேலென சிறியதும், பெரியதுமாக இருக்கின்ற மலைக்குன்றுகள், இயற்கையான காடுகள் என அது இயற்கையின் சாம்பிராஜ்யம் போல இருந்தது.

உயரமான மலையுச்சியை நோக்கி போகின்ற ஒவ்வொரு தடவையும் வாழ்வை முன்பை விட நேசிக்க தொடங்குகிறேன். மலையுச்சிகளின் காட்சிகள் வசீகரிக்கக்கூடியவை. அங்கு இயற்கையின் வர்ணக்கோலங்களைப் பார்க்க முடியும். பச்சை நிறத்தில் மட்டும் எத்தனை விதமான பச்சை நிறங்கள்...? வெண்மையான முகில்களில் மட்டும் எத்தனை அழகான உருவ கோலங்கள், பனிமூட்டம்



சிரித்திரனால் நடாத்தப்பட்ட பயணச் சுவைக் கட்டுரைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டு பதிவான கட்டுரைகள் அடுத்துவரும் இதழ்களில் தொடர்ந்து பிரசுரமாகும்.

**தெரிவானோர் விபரம்**

**ராஜா நர்மி,**
**மலையகம்.**

**திவாகரன் செல்வநாயகம்,**
**மட்டக்களப்பு.**

**பாலசுப்பிரமணியம் சிவாந்தினி,**
**பொற்பதி குடத்தனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரம்பிய மலைத்தொடர்கள், சூரியன் உதித்துவிட்ட பிறகு பரவுகின்ற பொன்னிறம், இந்த நிறங்களில் ஒன்றை அதே சாயலில் மனிதனால் உருவாக்க முடியுமா என்றிருந்தது. அத்தோடு அந்த மலைப்பிரதேசம் முழுவதும் பறந்து திரிகின்ற காட்டுப்பறவைகள், நீண்ட நாளைக்கு பிறகு கூட்டம் கூட்டமாக பார்த்த மின்மினிப்பூச்சிகள், பட்டாம்பூச்சிகள், ஏதோ சொல்லமுடியாத அமைதிக்கு இட்டுச்சென்றன. நடப்பதைப்போல பறப்பதுவும் இந்த உடலை சோர்வடையச்செய்யாதா...? என்றிருந்தது.

மண்ணில் வெறும் சொற்ப நாட்கள் மட்டும் வாழ்கிற பட்டாம்பூச்சியின் வசீகரமான வாழ்வை பார்க்கிறேன். தான் வாழ்கிற குறுகிய காலத்தில் வழிநெடுக அழகிய மலர்களைத் தேடிப்போகின்றது. தேனை தேடித் தேடி ஆசை தீர பருகுகிறது. காற்றின் அசைவில் வானுக்கும் பூமிக்கும் அழகிய படபடப்புடன் பறந்துகொண்டே இருக்கின்றன. வாழ்வின் இரகசியத்தையும் வாழ்வதற்கான இரகசியத்தையும் எவ்வளவு எளிமையாக காட்டுகின்ற வாழ்க்கை அவற்றுக்கு.

இதற்காக மட்டும்தான் இந்த மலையினை கொண்டாடித் தீர்க்கின்றேன் என தோன்றக்கூடும். அது அப்படியில்லை. எனக்கு இந்த மலையில் கிடைத்த அனுபவத்தை என் பயணங்கள் எதிலும் நான் உணர்ந்ததில்லை. இயற்கையோடு இயற்கையாக மிக மிக அருகில் நான் என்னை உணர்ந்த தருணம் அது.


இந்த உயரமான மலையுச்சி ஆதித்தாயின் தனித்த முலையின் நுனிக்காம்பு போல எனக்கு தோன்றியது. இனியெழுதப்போகிற பயணக்குறிப்புகளில் மேலும் கூட இதனைப்பற்றி நான் எழுதக்கூடும். மறைகிற சூரியனைக் கங்கையிலும், ஹவுராவிலும் கண்கொட்டாது பார்த்துக்கொண்டே இருந்திருக்கின்றேன்.

எல்லோராவில் கைலாசநாதர் கோவில் கோபுரத்தின் மேலே அந்த பாறையுச்சியில் அமர்ந்தபடி பார்த்துக்கொண்டு இருந்திருக்கின்றேன். ஒரிசாவில் சூரியக்கோவிலில் இருந்தபடி வங்க கடலோரம் சூரியன் மறைவதை பார்த்திருக்கின்றேன். மறைகிற அந்த கதிர்கள் உடல் முழுவதும் பரவுகிற பொழுதுகளில் வசப்படுத்தக்கூடிய ஏதோவொன்று எனக்குள் நிகழ்ந்தது. இத்தனை அழகிய அஸ்தமனங்களை நான் பார்த்திருந்தேன். ஆனால் ஆதாம் மலையில் பார்த்த அந்த பிரமாண்ட சூரிய உதயத்தின் பின்னர் எந்தவொரு சூரியஉதயத்தையும் பார்க்க முயற்சித்ததில்லை. அப்படியொரு பரிபூரண தரிசனம் அது. அதைப்பற்றி சற்றுக்கூட விபரிக்க நினைக்கின்றேன். வாழ்வின் உன்னத தருணங்களை எல்லாம் மொழிபெயர்க்க முடியாத குறை எனக்குள் இருக்கிறது.

> உலகில் முதன் முறை இயற்கைக்கு மிக அருகில் இருந்தேன். என்னுலகில் இருந்தவர்கள் எல்லோரும் பொன்னிறமான அழகினை கொண்டிருந்தார்கள். திடீரென அந்த மாயம் நிகழ்ந்தது.

முதன்முதலில் பிரம்மாண்ட சூரியனின் முன் நின்றபோது மனிதர்கள் பிரமாண்டமான வானக்கூரையின் கீழ் கொஞ்சம் கூட பொருத்தமில்லாது கட்டிக்கொள்கின்ற வீட்டுக்கூரைகள் எவ்வளவு பெரிய அபத்தத்தின் குறியீடு என என்மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது. யாருக்காகவும் எந்தவித மாறுதலுமற்று இந்த பூமியின் வசீகரத்தை கூட்டுகிற இந்த நட்சத்திரங்கள், சூரியன், நிலவு, வானவில் என்பவற்றை உண்மையில் நாம் இரசிக்கின்றோமா என்று இருந்தது.

உலகில் முதன் முறை இயற்கைக்கு மிக அருகில் இருந்தேன். என்னுலகில் இருந்தவர்கள் எல்லோரும் பொன்னிறமான அழகினை கொண்டிருந்தார்கள். திடீரென அந்த மாயம் நிகழ்ந்தது. நிர்மலமான அந்த பரந்த ஆகாயத்தில் திடீரென ஒரு பொன்னிற புள்ளி, பின்னர் சிறிது சிறிதாக அது மாபெரும் பெரிய பொன்னிறமான துவாரமாக மாறி, அந்த பொன்னிறமான உலகுக்கு அழைத்து செல்வது போன்று எனக்கு தோன்றியது. ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றேன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை என் வாழ்வில் உன்னதமான சூரிய அஸ்தமனங்களை பார்த்திருக்கிறேன் இருக்கிறேன். ஆனால் சூரிய உதயம் என்றால் இன்று வரை இந்த ஆதாம் மலையில் இருந்து பார்த்த சூரிய உதயம்தான்.

எவ்வளவு வருந்தி உங்கள் பாதங்களை அந்த ஆதித்தாயின் நிலத்தில் பதித்து சென்றீர்களோ அந்தத் துயர் கணப்பொழுதில் காணாமல் போயிருக்கும். அங்கிருந்து பார்க்கும் போது எனக்கு புரிந்தது, மனிதர்கள் ஏன் ஆதியில் இந்த சூரியனை கடவுளாக கொண்டாடித் தீர்த்தார்கள் என்று. அந்த ஒளிக்கதிர்கள் தீண்டுகின்ற இடம் எல்லாம் தேஜஸ்மயமாக மாறிவிட்டது. சூரியன் ஒளி பட்டு வருகிற அழகுக்குப் பெயர் தேஜஸ் என்று சொல்வது தான் சரியாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

அந்த மாபெரும் சூரியனை நோக்கி அந்த கதிர்கள் என்னை உள்நோக்கி அழைத்து சென்ற போது, எப்போதோ என் மனதில் ஆழமாக வேரூன்றிப்போயிருந்த உபநிஷத மந்திரம் ஒன்று என் ஆழ்மனதில் இருந்து என்னையறியாமலே நினைவுக்கு வந்தது. இயற்கைக்கு மிக மிக அருகில் இருக்கிறேன். அதன் உன்னதங்களை உணரும் தருணம் தோறும் மனம் உருகி கரைந்தொழுக சிறு பிரார்த்தனையை தவிர பதிலீடாக என்ன கொடுத்துவிட முடியும் என்று தோன்றியது.

அந்த ப்ருஹதாரண்ய உபநிஷத மந்திரம் இப்படி ஆரம்பிக்கும்.

**அஸதோ மா ஸத்கமய**
**தமஸோ மா ஜ்யோதிர் கமய**
**ம்ருத்யோர் மா அமிர்தம் கமய**
**ஓம் சாந்தி : சாந்தி சாந்தி**

- ஓ பகவானே எங்களை அசத்தியத்தில் இருந்து சத்தியத்திற்கும்

இருளில் இருந்து ஒளிக்கும்

இறப்பில் இருந்து அழிவற்ற நிலைக்கும் அழைத்துச் செல்வாயாக...

ஆம் அந்த சூரியனிடம் நான் மனமுருகி கேட்டது இதை தான்.




## பார்த்தசாரதி என்றால்?

பாரதச் சுருக்கம் பற்றிய பாடமொன்றில் மாணவன் ஒருவனிடம் கீழ்க்கண்டவாறு கேள்வி கேட்கப்பட்டிருந்தது.

**பார்த்தசாரதியென்று யாருக்குப் பெயர்?**

மாணவன் அளித்த விடை

பஸ்சிற்கு நான் நின்ற போது பஸ் வந்ததும் நிற்பாட்டும்படி சைகை செய்தேன். சாரதி என்னைப் பார்க்காமல் போய்விட்டார். அடுத்த பஸ் வந்ததும் அந்த பஸ்ஸின் சாரதிதான் என்னைப் பார்த்தார். பஸ்சும் நின்றது. எனவே இவர் தான் பார்த்த சாரதி. மற்றவர் பார்க்காத சாரதி.



**முன்பு கலைப்படம் எடுப்பதாக கூறித்திரிந்தாயே இப்ப என்ன செய்கிறாய்?**

கலைப்படம் கையைக் கடித்து விட்டது. இப்போ கலப்பட வியாபாரம் கொடி கட்டிப் பறக்கிறது.

**சீனி விலை கூடப்போகிறதாமே?**

இப்படி எல்லாம் விலையைக் கூட்டினால் மனிசர் எப்படி உயிர் வாழுறதோ தெரியாது.

**அதுமட்டுமல்ல குடிவகைகளின் விலையையும் கூட்டப் போகிறார்களாமே!**

விலை கூடினால் என்ன? தட்டுப்பாடு வராமல் தாராளமாக இருந்தால் போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொல்லாட்சி

## நன்றி

**சொற்களுக்குள்** ஆட்சியுண்டு அவை சொல்லித்தீரா. வேறெந்த மொழிகளுக்கும் இல்லாத கிடைத்தற்கரிய சொற்கள் தமிழ் மொழியிலே குவிந்து கிடக்கின்றன. அவ்வாறான சொற்களின் "நன்றி" என்பதும் ஓர் நயத்தற்குரிய சொல்லாகும்.

இற்றைவரைக்கும் "நன்றி" என்ற சொல் மொழியின் செழுமைக்கும், அதன் வளர்ச்சிக்கும் செயல்களின் தொடர்ச்சிக்கும் பெரும்பங்காற்றுகின்றது எனலாம். இவ்வாறான சொற்கள் எதிர்க் கருத்துக்களையும் சொல்லின்பாலுள்ள பொருளின் ஒத்த கருத்துக்களையும் இடத்திற்கேற்பப் பொருள்கூறி நிற்கின்றது. இதனை மொழி இலக்கணத்தின் தனித்துவம் எனலாம்.

"நன்றி"என்ற சொல் பல்வேறு காலப்பகுதியில் பலரால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டாலும் பொதுவான இலக்கணம் "ஒருவர் செய்யும் உதவிக்கு அவரின் மனம் குளிரும் வகையில் அந்த உதவியை மனதால் உணர்ந்து மகிழ்ச்சியான சொற்களை, வார்த்தைகளை இனிமையாக கூறுதல் எனலாம்." இதனை "நன்றியுணர்தல்" என்றும் கூறுவர். பின்னைய நாட்களில் "உபகாரம்" என்ற சொல்லும் நன்றிக்கு ஏற்புடைய சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு செயலைச் செய்கின்றபோது கிடைக்கும் பிரதி பலன்களை எதிர்பாராது செய்வதே சிறந்ததாகும். செயலின் விளைவால் கிடைக்கும் வெற்றிக் கனியை ஒருவன் மாத்திரம் சுவைப்பதில்லை அதற்கு ஊன்று கோலாகவும் அடித்தளமாகவும் இருந்த இன்னோரன்ன பிறரும் சுவைக்க வேண்டியவர்களாகின்றனர். அவ்வுதவியை நாம் மறவாதிருத்தலை "செய்நன்றி" என்கிறோம்.

அவ்வாறானவர்களின் உதவிக்குக் கைமாறாக உடனடியாக நாம் செய்யும் உதவி 'நன்றி' என்ற ஒற்றைச் சொல்லை உதிர்வதாகும். ஆனால் அதனை உதிர்வதற்கு நாம் பின் நிற்கிறோம். அதனைச் சொல்வதற்குத் தயங்குகின்றோம்.

நன்றியுணர்வை தி ருவள்ளுவர்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு."**

பொருள் - எத்தனை பெரிய அறங்களை அழித்தவர்க்கும் பாவத்தைக் கழுவ வழிகள் உண்டு. ஆனால், ஒருவர் செய்த உதவியை மறந்து தீமை செய்பவனுக்கு வழியே இல்லை.

என தனது குறளில் எடுத்தியம்புவதைக் காணலாம்.

பழமொழியிலும் "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என நன்றி உணர்வு வலியுறுத்தப் பட்டிருப்பதையும் அறியமுடிகிறது. ஆனால் மனிதனோ நன்றியை மறந்து வாழ்வை இழந்து தவிக்கிறான்.


"நாய்க்குச் சோறு வைத்தால் சாகும் வரை வாலாட்டும்"

"நண்பனுக்கு சோறு வைத்தால் நாவாலே சுட்டுபுடுவான்" என்று சினிமாப் பாடல்களிலும் நன்றி உணர்வினை வெளிப்படுத்தும் பாடல்கள் உண்டு.

"நன்றி கெட்ட உலகமிது" என்று பழமைவாதிகளும் சொல்வதுண்டு.

நன்றியுணர்வென்பது மனிதனைக் காட்டிலும் நாய்க்கு அதிகம் உள்ளது என்பதை நாம் நடைமுறை வாழ்க்கையில் அனுபவித்து வருகிறோம். அந்த நன்றி உணர்வு கூட பல சந்தர்ப்பங்களில் தேவைக்கு மாத்திரம் பயன்படுத்தப் படுவதும் தற்போதைய மனித வாழ்வில் காணமுடி கிறது. மேற்கத்தேய நாடுகளில் கடையில் சிறு பொருள் வாங்கினாலும் அதற்கு நன்றி சொல்லும் வழக்கம் இருந்துவருகிறது. ஆனால் எமது நாட்டில் அவ்வாறான பண்புகள் பெரிதளவில் இருப்பதில்லை.

சிரித்திரன் சஞ்சிகை கடந்த இதழுடன் தனது 6ஆவது இதழைப் பூர்த்திசெய்துள்ளது. எனவே இதற்கு பல வழிகளிலும் பக்க பலமாக நின்று உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இப்பகுதியினூடாக நன்றி கூறுகின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிரித்திரன் அகராதி

**அரசியல்வாதி:** மக்களால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவிரோதி

**உலகம்:** ஊழலால் சுற்றும் உருண்டை.

**கடலட்டை:** திருடர்களுக்கு நீரடி நீச்சல் பழக்கிய புதிய தொழில்.

**உரிமைகள்:** தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகளாலும் ஏனைய காலத்தில் மக்களாலும் பேசப்படுவது.

**நாணயம்:** இலங்கையில் அதிகம் உற்பத்தி செய்யப்படுவது.

**குடிகாரன்:** தன் விலாசத்தைப் பிறரிடம் கேட்டறிபவன்.

**பத்திரிகை:** அழுத்தகத்தில் இருந்து வெளிவரும் செய்தித்தாள் இரத்த அழுத்தம் ஏற்படுத்தும் குணமுடையது.

தமக்கு உதவி தேவைப்படும் போது மாத்திரம் உதவி பெறுவதற்காக நன்றியுணர்வை வெளிக்காட்டும் மனிதர்களும் எம்மிடத்தில் உள்ளனர்.

ஔவையார் தனது மூதுரையில்

**"நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்**
**கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத**
**ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்**
**நீர் மேல் எழுத்துக்கு நேர்."** என்றார்

நல்ல பண்புள்ள ஒருவருக்கு இன்னல் ஏற்படும் வேளையில் நாம் அவருக்கு செய்கின்ற உதவியானது கல்லின்மேல் எழுதப்பட்ட எழுத்தைப் போல் என்றென்றும் நிலையாக அமைந்துவிடும். அவர்கள் அந்நன்றியுணர்வை எப்பொழுதும் மனதிற்கொள்வர். மாறாக தீய பண்புள்ள ஒருவருக்கு செய்யும் உபகாரம் நீர் மேல் எழுத்துப்போல் உடனே அழிந்துவிடும். என்கிறார். எனவே நாம் எவரின் உதவியின்றியும் இவ்வுலகில் வாழ்தல் கடினம் என்பதால் உதவுவோர் எல்லோர்க்கும் நன்றி உணர்வை கூறும் மனிதர்களாய் வாழ்வோம்.

**இதனைப் படிப்போர்க்கும் மிக்கநன்றி.**

## உனக்கு மட்டும் எப்படி?

பிரபல பிரெஞ்சு எழுத்தாளரான பால்சாக் என்பவரின் வீட்டுக்கு ஒரு நாள் இரவு, திருடன் ஒருவன் சென்றிருந்தான் உள்ளே சென்றவன் மேசை லாச்சிகளைத் துளாவித் துளாவிப் பார்த்துக் கொண்டிருந்தான். இதை மறைவிலிருந்து கவனித்த பால்சாக் இரக்கப்பட்டுச் சொன்னார்.

"பகல் முழுவதும் தேடித் தேடி மேசைக்குச் சொந்தக்காரனான எனக்கு அகப்பாடாத காசு இரவில் உனக்கு மட்டும் எப்படி அகப்படப்போகிறது."

## தலை போய்விட்டது

நடந்து முடிந்த சண்டையொன்றின்போது எதிரியின் காலொன்றை வெட்டிக் கொண்டு வந்தான் சிப்பாய் ஒருவன். அவனைப் பார்த்து இன்னொருவன் கேட்டான். எதிரியின் தலையை வெட்டாமல் காலை ஏன் வெட்டினாய்? என்று.

"நான் என்ன செய்வது? தலையை வேறொருவன் முன்னமே வெட்டிக் கொண்டு போய் விட்டானே" என்றான் நிதானமாக.

## பள்ளிப் பகிடி



**மாணவன் 1 :** நம்ம தமிழ் வாத்தியாரை யாரோ அடிச்சிட்டாங்களாமே?

**மாணவன் 2 :** இங்கே தமிழ் ஆசிரியர் யார்? என்று இவரைக் கேட்டதற்கு "அடியேன்" "அடியேன்" என்று சொல்லியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**என்னப்பா வேர்த்துக்களைத்து ஓடிவாறாய்.**

சந்தியிலே ஒரு காடையன் நின்று எல்லோரையும் வெருட்டுறான்…

**நீ எங்கை போயிற்று வாறாய்?**

புருஸ்லீ நடித்த காராட்டி படம் பார்த்திட்டு வாறன்.



**இவள்:** உன் கலைஞர் மாப்பிள்ளை நிறைய சீர்வரிசையுடன் வந்தாரா?


**அவள்:** ஆம்… நிறைய சீர்வரிசைக் கவிதைகளுடன் வந்தார்.

**பெற்றோல் தட்டுப்பாட்டால் காரிலும் போக முடியவில்லை, வண்டிலிலும் போக முடியவில்லை.**

"ஏன் வண்டிலில் போக முடியவில்லை"

**"புண்ணாக்குக்கும் பெரிய டிமாண்டாச்சே!"**









**நீங்கள் குடும்பக் கட்டுப்பாட்டை அனுஷ்டிப்பதாக தெரியவில்லை.**

**தற்செயலாகத் தேர்தலில் போட்டியிட்டால் என் பிள்ளைகளின் வோட்டாவது விழுமல்லவா?**



**ஸ்ரீமான் பொதுசனம் :** அலுவலகத்தில் ஒரு உத்தியோகத்தரையும் காணவில்லையே!

**அவர் :** 'அல்' வா அகத்தில் இருக்கின்றார்கள் அதாவது கன்டீனில் இருக்கின்றார்கள்.



**ஒருவர் :** கோயிலுக்கை ஒரு சனமும் இல்லை. எல்லாம் கோயில் முகப்பில நிற்குதுகளே?

**மற்றவர் :** அது அடிக்கிற சிதறு தேங்காய்யைப் பொறுக்கிறதுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் கதை



- ருஜித்திரா விமலதாசன்

பக்க அனுசரணை: குணரத்தினம் கிருபன்

**"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை திறனறிந்து தேர்ந்து கொளல்"...**

அழகானஇதமானபாடல்களுடன் பேருந்தில் பயணித்த இரு தோழிகள் அதில் ஒருத்தி கர்ப்பிணி பெண்ணாக இருந்ததை கண்ட வயதான ஒரு பாட்டி ஏன் அம்மா இந்த நிலமையில் எங்கு போகின்றாய்.

என்று கேட்க என் தோழியின் திருமண விழாவிற்கு செல்கின்றேன் என்று சொன்னாள்.

கவனம் அம்மா. குழந்தை செல்வம் மட்டுமே அரிதான ஒன்று. குழந்தை செல்வம் கிடைக்க எத்தனை ஜீவன்கள் எவ்வளவு தவமிருக்கின்றார்கள்.

நீ அசடையாக இப்படி பஸ்லில் தனியாகப் போகிறியே அது தான் கேட்டேன். என்று கூறிக் கொண்டிருக்கையிலே பாட்டிக்கு கண்கள் கலங்கியது...

பத்திரிகையினை படித்துக் கொண்டிருக்க கண்கள் மேலும் கலங்கின.

தாயே!!!

இந்த உலகு உன்னை மலடி என்று அழைக்கும் கொடுமையான சொற்களை கேட்டுத் தினம் தினம் நீ அழுது புலம்பிப் பல ஆண்டுகள் நான் உருவாக எத்தனை வேண்டுதல்கள் எத்தனை பிராத்தனைகள் என்னை காண உன் மனம் ஏங்கியது...

ஆனால் நீயோ என்னை அலட்சியம் செய்த்தனால்... இன்று நான் உலகில் கண் திறந்து ஆனந்தத்துடன் அம்மா என்று கூப்பிட நினைக்க முன் என்னை பலி கொடுத்து ஏன்...

காலம் விடை கூறாது அன்னையே!!!

கண்ணீர் வடிக்காதே!!!

காரணம் உன் அலட்சியத்தால் என இதயம் திரும்பியது உன் செயல்களால்!!!

உன் கவனக் குறைவால் என் இதய துடிப்பை நீ எவ்வாறு கொடுத்தியோ அவ்வாறே எடுத்துக்கொண்டாய் என் மூச்சை....

மீண்டும் இந்த உலகில் அவதரிக்க வாய்பிருந்தால் மீண்டும் வந்து ஆறுதல் அழிக்கின்றேன் அன்னையே!!! நீ விட்ட பிழையால் விடைபெற்று செல்கின்றேன் இந்த உலகை விட்டு !!!

ஏன் இப்படி இந்த பகுதியை படித்து அழுதனீங்கள்.

இல்லை அம்மா என் மகள் நாட்டில் பிரச்சனை காரணமாக அந்நிய நாட்டிற்கு சென்றாள்.

அவளும் கணவரும் அளவு கடந்த பிரியம். அவர்களுக்கு பிள்ளைகள் இல்லை ஐந்து வருடங்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை ஏசாதவர்கள் யாரும் இல்லை.

ஐந்து வருடங்களின் பின் அவள் கற்பமானாள். அந்நிய நாட்டில் இருவரும் வேலை செய்தார்கள்.

அவளும் கணவன் வேலைக்கு போகவேண்டாம் என்று சொல்லக் கேட்காமல் வேலைக்குச் சென்றாள்.

மோட்டார் வாகனம் ஓடுவதில் ஆர்வம். அருகில் பெரியவர்கள் யாரும் இல்லை .

தான் கற்பிணிப் பெண் என்பதனையும் மறந்து வாழ்ந்தாள்.

ஏழு மாதங்களின் பின் வைத்தியர் சொன்னார்.

பிள்ளையின் இதயம் திரும்பி உள்ளது

குழந்தை பிறந்த பிறகு அறுவை சிகிச்சை செய்து காப்பாற்றலாம் என்று வைத்தியர்கள் கூறினார்கள்.

கவனமாக ஓய்வு எடுக்க வேண்டும் என்று கூறினார்கள் வைத்தியர்கள். அப்பொழுதும் கவனமெடுக்காமல் இருந்தாள். பத்து மாதங்களின் பின் குழந்தை காலை எழு மணிக்கு பிறந்தது.

அறுவை சிகிச்சைக்கு ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கையில் அவளின் கவனக்குறைவால் பிள்ளை இறந்து விட்டது.

அவளும் மனநிலை பாதிக்கப்பட்டு இறந்து விட்டாள்.

"காணும் பெண் பிள்ளைகளுக்கு இதைச் சொல்லுவேன்."

அம்மா. நீ யார் பெற்ற பிள்ளையோ உன் தாயாவது சந்தோசமாக இலங்கையில் நிம்மதியாக வாழ வேண்டுமென்று சொன்னேன். என்று பாட்டி கூறினார்.

கற்பிணிப் பெண் பாட்டியைப் பார்த்து, பாட்டி என்னுடைய அம்மா ஊரில் இருக்கின்றார் எனக்கும் அறிவுரைகள் சொல்ல யாரும் இல்லை.

நீங்கள் என்னை மகளாக நினைத்து வாருங்கள் எங்கள் வீட்டில் எங்களுடன் தங்குங்கள் என்று அடம்பிடித்து கேட்டாள்.

பாட்டியும் எவ்வளவு சொல்லியும் கேட்காதபடியால் சம்மதித்தார். எல்லாரும் சந்தோஷமாக பயணித்தார்கள்.

உயிர் என்பது எவ்வளவு முக்கியமானது.

உயிர்களை தொலைத்தவர்களுக்கே உயிர் அருமை தெரிகின்றது.

**அறத்தின் தன்மைகளை ஆராய்ந்து தன்னைவிட மூத்த அறிவுடையவர்களின் நட்பைக் கொள்ளும் வகை அறிந்து ஆராய்ந்து கொள்ள வேண்டும்.**




## மாத்திரைக் கதை

# மனசாட்சி

குளத்துக்கு மேலே தாழ்வாகப் பறந்த குருவி காற்றைப் பார்த்து கேட்டது.

"மனசாட்சி என்றால் என்ன?"

காற்று உடனே வேகமாக வீசத் தொடங்கியது. குளத்து நீரின் அலைகளைத் தள்ளி எறிந்து தாமரை இலைமேல் கொட்டிவிட்டு குருவியை நோக்கி "கீழே பார்..."

என்று சொன்னது காற்று.

குருவி கீழே பார்த்தது.

அங்கே -

காலம் முழுவதும் தாமரை இலையைத் தாங்கி நிற்கும் தண்ணீரைத் தாமரை இலை ஒரு நிமிடம் கூடத் தாங்காமல் உருட்டி ஒதுக்கித் தள்ளும் நிகழ்ச்சி தென்படலாயிற்று.


காற்றுக் கூறியது "தாமரை இலையிடம் எது இல்லையோ அதுதான் மனசாட்சி."





- காசி ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## புதிய கண்டுபிடிப்புகளுக்கான வளர்ச்சியகம்
## CENTRE FOR CREATIVITY AND INNOVATION


65, Velappar Lane, Stanley College Front Road, Jaffna.
E-mail : info@visionnext100years.org
Web : visionnext100years.org
+94 21 315 1140 | +94 75 741 7332



இச் சஞ்சிகையானது 65 வேலப்பர் ஒழுங்கை (கனகரத்தினம் கல்லூரி முன் வீதி), யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய கண்டுபிடிப்புகளுக்கான வளர்ச்சியகம் (CENTRE FOR CREATIVITY AND INNOVATION) நிறுவனத்தால் 693 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள New Evergreen Printers நிறுவனத்தினால் 2021 ஆண்டு [illegible] மாதம் 01ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
ஸ்தாபக ஆசிரியர் சி.சிவஞானசுந்தரம் (சிரித்திரன் சுந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org